
# திராவிடநாடு

14—4—57 | வார வெளியீடு | விலை 0—2—6

# அந்தோ! அதை நினைத்தால்...

[ அரங்கண்ணல் ]

“சீனாவிற்குச் சென்றிருந்தேன். ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் உண்டாக்கப்பட்டது என்று சொல்லி ஒரு நீர்ப்பாசன திட்டத்தைக் காட்டினார்கள். அதைவிட மேலானது, இங்கே நான் காண்பது. ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பே, இந்த அரிய முறை செய்யப்பட்டுள்ளதே!!”, என்று வியந்து வியந்து உரைத்திருக்கிறார், டில்லி சர்க்காரின் நீர்ப்பாசனக் குழுத் தலைவராயிருக்கும் கன்வார் செயின், என்பார்.

“வடக்கிலும் அப்போது ஆண்ட மன்னர்கள் பல ஆறுகளையும், கால்வாய்களையும் அமைத்திருக்கிறார்கள். அவை யாவும் அரசர்கள் தமது ஆடம்பரத்தைக் காட்டிட அமைத்தார்கள். இங்கோ, மன்னன் மக்களுக்காகச் செய்திருக்கிறான்”, என்று புகழ்ந்து புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்.

இன்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன்பு! ஏற்றம் என்றால் இன்னதென்றே அறியாமலிருந்தது இங்கிலாந்து. தமிழகத்தைப் போல, மலைவளமும், நதி வளமும் அற்ற நாடு. நாற்புறமும் கடல் தான் சொத்து. சாப்பிடவேண்டுமென்றால், நிலக்கரிதான் அதிகம் அங்கே! அப்படிப்பட்ட நாடு, இன்று எத்தனையோ சீரும் சிறப்புடன் திகழ்கிறது. ஆறுகளிருந்து, நதிகள் தாண்டிக் குதித்து அருவியாகி விழ மலைகளிருந்தாலன்றோ, மின்சாரம் உற்பத்தி செய்யலாம். அந்த நீர்வளம் கிடையாது! அதனால், மக்கள், வசதி தரும் மின்சாரம் மட்டுமின்றி, குடிக்க நீருக்கும் அடிக்கடி அலையவேண்டி நேருகிறது. நீரில்லா பிரச்னை, இன்று பெரிதாகி, ஆலைகள் பலவற்றிற்கு மின்சார சக்தி கிடைப்பது அரிதாகி, என்ன செய்வதென்று தெரியாமல் ஏங்குகிறார்களாம்! இலண்டனிலுள்ள அறிஞர்கள் இந்தக் கிழமை அங்கே கூடி, சூரியனிலிருந்து, மின்சார சக்தியைப் பெறும் முறைகளை விரிவாக்குவது பற்றி, விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். 1700 ஆண்டுகளுக்கு முன்பு அறியோம், அமெரிக்காவைப் பற்றி! இன்று அங்கே, உலகமே வியக்கும் உன்னத சாதனைகளையும், ஒப்பற்ற வளத்தையும் காண்கிறோம் — நேரு பிரானே பிச்சையெடுத்துச் செல்ல வேண்டிய அளவுக்குப் பெரிய நாடாக உள்ளது. ஆஸ்திரேலியா, யாரும் அறியார், 1700-ஆண்டுகளுக்கு முன்பு—இன்று அங்கிருந்து வியாபாரக் குழு வருகிறது நம்முடன் பேரம் பேச. இப்படி, உலகத்திரையில், புது ஒளி பெற்று இன்றுள்ள பல நாடுகள் பூக்காததற்கு முன்பே, நமது எழிலகமாம் திருஇடம் சிறப்புற்று விளங்கிற்று! இதனை இதோ ஒப்புக்கொள்கிறார் வடநாட்டு அதிகாரி கன்வார்!!

கங்கையை வென்றான், கடாரத்தைப் பணியவைத்தான், இமய மலையிலே எமது இலச்சினையைப் பொறித்தான், எங்கும் புகழ் மணக்க வாழ்ந்தான் — என்று நமது தமிழனின் சிறப்பைப்பற்றிப் பேசினால், கட்டுக் கதையெனக் கருதுவோரும் இருக்கின்றனர். ஏதோ, சொல்லுகிறோம், என்று எண்ணுவோரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு தோழர் கன்வார், வியந்து பாராட்டும்செய்தியைப் படைக்கிறோம்.

காவிரி ஆறு! அன்னாய் வாழி காவேரி—என்று அழகு தமிழால் நமது புலவர்கள் அகமகிழ்ந்து பாடிடும் பொன்னிச் செல்வம்! அது ஒரு காலத்தில், தும்பில்லா காளைபோல், துடுக்கு அடக்கப்படாத இளைஞன்போல், இருந்தது. வெள்ளம் வந்தால், கட்டுப்படுத்த இயலாது. வீணே அழியும் நிலபுலன்கள். கால் நடைகளும், வீடுகளும, காவிரியின் சீற்றத்துக்குப் பலியாகும். இதனால் சேதம் விளைவது மட்டுமல்ல, பயன்பட வேண்டிய நீரும் பாழாகிறதே என்று எண்ணினான் ஒரு மன்னன்! எப்படிப்பட்ட மன்னன் அவன்? அறுகால பூஜையைப் பற்றி விசாரித்துவிட்டு “அகோ வாரும் பிள்ளாய் மந்திரி! அப்படியானால் நாட்டில் மாதமும்மாரி மழை பொழிகிறதா?” என்று கேட்கக்கூடியவனல்ல. விரோதிகளை வெல்ல யாகமும் யோகமும செய்கிறவனல்ல. வீரன்! ஏக்கழுத்தும், பீடு நடையும், பெருமித நோக்கும் கொண்ட தீரன்! தென்னகம் எல்லாம் தமிழ் கொழித்த வேளை, அது. மக்களெல்லாம்— நயேபைசாக்களையல்ல!- பொன்னும் பொருளும் கொண்டு செழிப்புடன் சிறந்திருந்த காலம். வடக்கு நோக்கினான் அவ்வீரன்! வடபுலம் சென்று வென்று வர ஆசை கொண்டான் — கிளம்பினான். டில்லியும், அரித்துவாரமும், காஷ்மீரும், கங்கைக்கரையும் இன்று வேண்டுமானால் நமக்கு எளிதாக இருக்கலாம். ஏறி உட்கார்ந்தால் விமானம் கொண்டு போய் விட்டுவிடும்! ஆனால் அன்று தூத்துக்குடியிலிருந்து மதுரை வருவதென்றால், நாட்கள பல ஆகும் — தஞ்சையிலிருந்து சென்னை முனைவரை வந்துசேர

(15-ம் பக்கம் பார்க்க)

# புதிய முயற்சி

...ா 15] ஆண்டு சந்தா ரூ. 8 [14—4—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 39


மொகஞ்சதாரோ! ஹரப்பா!! நாகரீகம் — திராவிடத்தின் பழம்பெரும் நாகரீகச் சின்னங்கள் என்று, அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும் ஒப்புக்கொண்ட இதனை, மறுக்கப் புறப்பட்டிருக்கிறார் ஒருவர்! தொல் பொருளாராய்ச்சியின் துணைத் தலைவராக இருக்கிறார்—பெயர் டி. என். இராமச் சந்திரன். அவை ஆரியர்தம் வருகைக்கு முன்பே நாகரிகம் தவழ்ந்த இடங்கள், வேதகாலம் முகிழ்ப்பதற்கு முன்பே, விளங்கிய நகர்கள் அவை! எனினும், இவர், "அந்த இடங்கள் இருக்கு வேதகாலத்தைச் சேர்ந்தது; ஆரியரே அதற்கு உரிமையாளர்கள்", என்று விளக்கம் தரக் கிளம்பியிருக்கிறார். இந்திய உபகண்டத்து தொல் பொருளாராய்ச்சித் துறையின் தலைமை ஆணையாளராக இருந்தார் சர் ஜான் மார்ஷல் என்பார். அவர் கூறினார், "வரலாறு தோன்றுவதற்கு முற்பட்ட எகிப்து, மெசபடோமியா, மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளைவிட, சிந்து நதிப் பிரதேச நாகரீகத்தில் ஒரு மாபெரும் சிறப்பு காணப் படுகிறது. அந்நாடுகளில் மாபெரும் ஆலயங்கள், மன்னர் மாளிகைகள், அரசர்களுடைய கல்லறைகள் ஆகியவற்றைக் கட்டுவதற்கு பெரும் பொருளும் அதிக சிந்தனையும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் சிந்து நதி நாகரிகத்தில் நாட்டிலுள்ள பொதுமக்களின் வசதிக்காக மிகமிக அழகிய கட்டிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன", என்று. மொகஞ்சதாரோவிலும், ஹரப்பாவிலும் தோண்டியெடுக்கப்பட்ட நாகரீகச் சின்னங்கள் திராவிடருடையதே என்று, இந்திய உபகண்ட வரலாற்று நிலையப் பேராசிரியராக விளங்கிய ஹிராஸ் பாதிரியார் எழுதினார். சென்னைப் பல்கலைக் கழக இந்திய வரலாற்று பழம்பொருளாராய்ச்சிப் பேராசிரியர் வி. இராமச்சந்திர தீட்சிதர், இதனை ஆதாரங்களோடு விளக்கினார். பேராசிரியர் இராத குமுத முகர்ஜி போன்றோரும், இது குறித்து எவ்வளவோ விளக்கங்கள் எழுதுகின்றனர். அகப்பட்ட எழுத்துக்கள், கிடைத்த சின்னங்கள், ஊரின் அமைப்பு, வீதிகளின் தோற்றம், வீடுகள் முறை இவை யாவும் பழந் தமிழர்களுக்கே உரியதென்று அறிஞர்கள் முடிவு கட்டினர். எனினும், இதற்கோர் புது விளக்கம் தரப் புறப்படுகிறார், இவர்!

நமது பழம் பெரும் திராவிடத்துக்குரிய சிறந்ததோர் வரலாறு, திட்டவட்டமாக இல்லாமலுள்ளதே இது போன்ற குழப்பத்துக்குக் காரணம். சங்க காலத்துக்கும் ஒரு சரியான வரலாறு, இல்லை. முயன்று முயன்று பல பேராசிரியர்கள் எழுதினர்! விளக்கங்கள், தரமுற்பட்டு வருகின்றனர்!!—எனினும், உருவான ஒரு வரலாறு அமையவில்லை. அப்படியொன்று இல்லாத காரணத்தால் தான், இத்துணை நாளாயிற்று நமக்கு, ஆரிய திராவிடம் என்பதை மக்களிடையே விளக்க.

ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையில் நாடு இல்லை. காலமாற்றத்தோடு, கருத்து மாற்றமும் எவ்வளவோ ஏற்பட்டுவிட்டது. எதெது மூளைக்கு ஒத்ததாகவும், மனிதப் பண்புக்கு ஒப்புடையதாகவும் உள்ளதோ, அந்த முறையில் சமூகத்தை அமைப்பது தான் இன்றுள்ளவர்களின் கடமை. விஞ்ஞான யுகம், அதைத்தான் விரும்புகிறது! அதனால்தான் நாம், எவரெவர் மனித உரிமைகளையும் உணர்ச்சிகளையும் மதித்து நடக்கிறார்களோ, அவர்களெல்லாம் அடங்கிய **பேதமற்ற— அறிவொளி கொண்ட** — ஒரு சமுதாயம் அமைக்கப்பட வேண்டும் எனக் கருதுகிறோம். அதுபோது, ஆரிய முறைகள் என்று கூறப்படும் பழைய முறைகளின் மூலம் உற்பத்தியாகும் பேதக் கூறுகளைக் கண்டிக்கிறோம்!

மனிதனை மனிதன் மதிக்கும் பண்பும், வெறுப்புடன் எதையும் நோக்காத உயரிய நிலையும் சமூகத்தில் மலர்ந்திட வேண்டும். இந்தக் காரணங்களால்தான் நாம், ஆரிய முறைகளையும் திராவிடப்பண்பாடுகளையும் விளக்கி வருகிறோம்.

ஒரு இருள் காடு! அதில் தோன்றிய ஒரு சில ஒளிச் சிதர்கள் எனலாம், மொகஞ்சதாரோவையும் ஹரப்பாவையும்!! நமது பழைய வாழ்வின், சின்னங்கள் அவை. அதனால், பழந்தமிழர் வாழ்வையும், வளத்தையும் அறிய முடிகிறது நாம். அந்த உண்மைக்கும் திரைபோட முயல்வது, நல்லதல்ல! அதனால் ஆரிய முறைகளுக்கு ஏற்றமும் விளைந்துவிடப் போவதில்லை!!

இதுபோன்ற விளக்கங்கள் புறப்படாமலிருக்க வேண்டுமேயானால், சரியான வரலாறு வேண்டும். இந்திய துணைக்கண்டத்தில் பிற இடங்களைப் பார்க்கினும், தென்னகத்தின் வரலாறுதான் மிகமிக இருண்டதாக இருக்கிறது. கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு, முதலியவைகளைக் கொண்ட தமிழ் மொழியினைக் குறித்தும், அது எங்கெங்கு வாழ்ந்தது, எப்படியெப்படித் திரிந்தது என்பது பற்றியும் அப்போதிருந்த மக்களின் பண்பாடுகள் குறித்தும், இலக்கிய வளம் பற்றியும் நல்ல

தோர் வரலாறு வேண்டும். இந்தத் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் முன்வந்துள்ளதாக அறிகிறோம். இந்த கிழமை அங்கே, திராவிட மொழி ஆராய்ச்சிக்கென குழு வொன்று அமைக்கப்பட்டு, அதில் இந்தியத் துணைக்கண்டத்து அறிஞர்கள் பலரும் இடம் பெற்றுள்ளனர். செயலாளராக புலவர் மணி திரு. தேவநேயப் பாவாணர் இடம் பெற்றிருக்கிறார். குழு, விவாதித்து, ஒரு வேலைத் திட்டத்தையும் வகுக்கும் என அறிகிறோம். இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்கு, தொல் பொருளாராய்ச்சித் துறை தன்னுடைய ஒரு சார்பற்ற உதவிகளை அளித்திடல் வேண்டும்! அதற்குப் பதில் குழப்பமளிக்கும் விளக்கங்கள் தருவது பலனளிக்காது. சீரிய பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் அ'பல்கலைக்கழகத்தை நாம் பாராட்டுகிறோம். பலனுள்ள ஆராய்ச்சி கிடைக்கவேண்டும் என்றும் விழைகிறோம்.

★

## வருந்துகிறோம்

சிறந்ததோர் கொடை வள்ளல் டாக்டர் அழகப்பா அவர்கள் சென்ற கிழமை மறைந்த செய்தி, நாட்டு அக்கரையில் ஆசைகொண்ட பலருக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கும். கல்வித் துறைக்கு அவர் வழங்கிய 'செல்வம்' பெரிது. நாட்டின் இதயத்தில், தனது நற்பணியால் இடம் பெற்றுக்கொண்டுவிட்ட அப் பெரியவர் மறைவு கேட்டு வருந்தினோம். அளகப்பா கல்லூரியினருக்கும், மாணவ, ஆசிரியர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

✱

செங்கற்பட்டில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நகராட்சித் தலைவராக இருந்தவரும், கல்வித் துறைக்கு செங்கற்பட்டிலும் காஞ்சியிலும் உதவிகள்செய்தவருமான திரு. வேதாசல (முதலியார்) அவர்கள் இந்த கிழமை இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்தினோம். காஞ்சி பச்சையப்பன் கல்லூரிக்கு அவரால் பெரும் உதவி பெறலாமென எண்ணியிருந்தோம். அவரைப் பிரிந்த உற்றார் உறவினர்களுக்கும், குடும்பத்தாருக்கும் நமது அனுதாபங்கள்.

# "திராவிட நாடு"
# புதிய விலை விவரம்

**தனிப்பிரதி ஒன்றின் விலை 16-காசு (0—2—6)**

## ஏஜண்டுகள் கவனத்திற்கு

அன்புடையீர்,

ஏப்ரல் முதல், புதுக்கணக்கும் புது நாணய மாற்றமும் செய்யவேண்டியிருப்பதால் மார்ச் முடிய உள்ள தங்கள் பாக்கி முழுவதையும் 15—4—57க்குள் இங்கு கிடைக்கும்படி அன்புகூர்ந்து அனுப்பிவைக்கவும்.

காகித விலை ஏற்றத்தை முக்கியமாகக்கொண்டும், புதிய நாணய முறையையொட்டியும் "திராவிடநாடு" பத்திரிகையின் விலை இதழ் 1-க்கு 16-நயேபைசேவாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதையும், வழக்கம்போல் தங்களுக்கு 25%கழிவு உண்டு என்பதையும், அதாவது, தாங்கள், இதழ் 1-க்கு 4-'புதுக் காசு' எடுத்துக் கொண்டு, அலுவலகத்துக்கு 12-'புதுக் காசு' வீதம் கணக்கிட்டு மாதா மாதம் பட்டியல்படி அனுப்பிவைக்க வேண்டியதென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிரதி 1-க்கு ரூ. 1-வீதம் முன்பணம் அனுப்பி வைப்போருக்கே கூடுதலான பிரதிகள் அனுப்பிவைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## சந்தாதாரர் கவனத்திற்கு

அன்புடையீர்,

**ஆண்டு சந்தா ரூ. 8—0—0**
**அரையாண்டு சந்தா ரூ. 4—0—0**

"திராவிட நாடு" சந்தாவில் சிறிது மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம் புதிய நாணய முறை மட்டுமல்ல என்பதையும் காகித விலை ஏற்றமே இதற்கு முக்கிய காரணமென்பதையும் சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சந்தாதாரர்கள் கடிதங்கள் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணைத் தவறாது குறிப்பிட்டு எழுதவும். சந்தா முடியும் தேதி முகவரியின் கீழே குறிப்பிடப்பட்டிருப்பதால், ஒரு வாரம் முன்னதாகவே தொகையை அனுப்பிச் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டுகிறோம்.

**நிர்வாகி.**




பறந்து பறந்து செல்கிறார், ஒரு இடம் இரண்டிடம் என்றல்ல, உலக முழுதும் பறக்கிறார், அமெரிக்காவிலிருந்து ஆபிரிகா வரை, இலண்டனிலிருந்து இலங்கை வரை எங்கெங்கு சிக்கல்களிலிருந்தாலும், உடனே ஓடுகிறார், உன்னதப் பெருமையைத் தேடுகிறார், அவரால் உயர்கிறது நாடு, பெருமை பெறுகிறது பாரதம், என்று பாராட்டுரை வழங்குகின்றனர், வி. கே. கிருஷ்ணமேனனுக்கு.

இலாகா இல்லாத மந்திரியாக்கி அவருக்கு ஏற்றமும் அளித்திருக்கிறார் நேரு! எங்கே, கேரளத்தில் நின்றால் 'கம்யூனிஸ்டுகளால்' கவிழ்த்துவிடப்படுவாரோ என்கிற அச்சத்தில் பம்பாயில் இடம் தந்து பாராளுமன்ற உறுப்பினராகவும் ஆக்கப்பட்டிருக்கிறார்!! நேருவின் தூதராக, ஒவ்வொரு வெளிநாட்டுக்கும் சென்று அழைப்பு இருந்தாலும் இல்லையென்றாலும் அந்த நாட்டுப் பிரச்னைகளில் தலையிட்டு சமரசம் காணவும், தனது 'குருநாதரின்' புகழ் ஓதவும், தவறுவதில்லை தோழர் மேனன். இதனால், இன்று உலகத்தின் ஒவ்வொரு முனையிலும், நேரு பண்டிதரின் பெயர் அடிபடுகிறது — நேருவும் விசேஷ அக்கறை எடுத்துக்கொள்கிறார் வெளிநாட்டுவிவகாரங்களில் —சந்தர்ப்பம் கிடைக்கிறபோது தானும் ஆங்காங்கு 'விஜயம்' செய்து விருந்தும் அதோடு புகழும் பெற்றுவருகிறார்!!

வளரும் உலகில், அந்நிய நாடுகளின் உறவும், அவர்களது பிரச்னைகளில் கவனமும் செலுத்தத்தான் வேண்டும் — கூடாது எனக்கூறுவோரல்ல நாம். ஆனால், அப்படி பெருமையைத் தேடப் போகும்போது, பெற்ற தாய்நாட்டையும் அங்கு அல்லாடும் கோடிக்கணக்கான மக்களையும் கவனத்தில் வைத்துக்கொள்ளக் கூடாதா? அந்தக் கவனம், பறந்து பறந்து ஓடிப் பரிகாரம் தேடிடும் இவர்களுக்கு எழுவதாவது உண்டா! ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, பலகோடி ரூபாய்கள் பாழாகிறதாமே ஒவ்வொரு நாட்டிலும்!!

டி. டி. கிருஷ்ணமாச்சாரி, எப்படியாவது பணம் வேண்டும் ஆகவே மக்களே, வாயைக் கட்டியோ வயிற்றைக் கட்டியோ பணத்தை மிச்சப்படுத்தி எனக்குக் கொடுங்கள் என்கிறார்! திட்டக் கமிஷன் துணைத் தலைவர் வி. டி. கிருஷ்ணமாச்சாரியாரோ, "பணம் போதுமா என்கிற கவலை குடைகிறது. ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அதிகம் பணம் தேவைப்படும்", என்று அவலக்குரல் கிளப்புகிறார்! ஆலைகள் வேண்டும், நல்ல சாலைகள் வேண்டும், அணைகள் தேவை, என்று நமது காமராஜர்களைக் கேட்டாலோ, "டில்லியை ரூ. 300 கோடி கேட்டோம். பாதிகூடத் தர மனம் ஒப்பவில்லை", என்று பல்லிளிக்கின்றனர்! இந்த இலட்சணத்தில், நமது பணம், வெளிநாடுகளில் பாழாகிறதாம்.

இதுபற்றி, எத்தனையோ தடவைகள், அரசியலாரின் தணிக்கைக் குழுவினர், கண்டறிந்து கண்டனமும் ஆட்சேபமும் தெரிவித்து இருக்கின்றனர். இருந்தும் இப்போது சில தகவல்களைக் கண்டிருக்கிறது, கணக்குக்குழு! அதனை கடந்த மார்ச்சு 29ந் தேதியன்று டில்லி பார்லிமெண்டிலும் சமர்ப்பித்திருக்கிறது!!

* * *

வெளிநாட்டு இலாகாவில் ஒரு அதிகாரியாம்! அவர் நான்கு ஆண்டுக்குள் மூன்று தடவை 'கார்' வாங்குவதற்காக பணம் வாங்கினாராம்!!

ஒரு கார் வாங்குவாராம்-அதை சர்க்காருக்குத் தெரியப்படுத்தாமலே விற்றுவிட்டு — இன்னொரு கார் வாங்க, பணம் கேட்பாராம், 'நம்ம' சர்க்காரும், "முதல் கார் என்னவாயிற்று?" என்று கேட்காமல் பணம் கொடுத்துக் கொண்டேயிருந்திருக்கிறது!!

ஒரு சமயம், காருடைய விலையை அதிகமாகச் சொல்லி, பணம் வாங்கினாராம். குறைந்த விலையில் கார் கிடைத்திருக்கிறது! மிச்சப்பட்ட பணத்தை, முறைப்படி சர்க்கார் கஜானாவுக்கு அனுப்பவில்லை!

ஒரு தடவை, இங்கிலாந்திலிருந்த தனது மனைவியின் பெயரில் காரை வாங்கியிருக்கிறார். அதை, தனது உறவினர் ஒருவருக்கு மூன்றுமாதத்துக்கெல்லாம் விற்றிருக்கிறார்.

*

இப்படி அந்த அதிகாரி தொடர்ந்து செய்திருக்கிறார் — நேருவின் இலாகாவிலிருக்கிற அதிகாரி. இதனால் சர்க்கார் பணம் நஷ்டம்! சாதாரணமாக ஒரு போலீஸ்காரன் தனது ஏழ்மையின் விளைவால் சிறு தவறு செய்துவிட்டாலும், வேலையை விட்டு 'கல்தா' கொடுக்கிறார்கள்! இங்கோ, வேலியே பயிரை மேய்ந்திருக்கிறது-வெளிநாட்டில் இந்தியாவின் புகழைப் பரப்பவேண்டிய அதிகாரியே இங்ஙனம் நடந்துகொண்டிருக்கிறார்!!

அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதாம், தெரியுமா? கொண்டு வந்து கோர்ட்டில் நிறுத்தி, "அடுக்குமா? ஏழைகள் நாட்டின் ஆஸ்தியை இப்படி விரயம் செய்த உனக்கு கடுங்காவல் தருகிறேன்" என்றுதானே செய்திருக்க வேண்டும்? செய்யவில்லை! 'கார் விற்றதன் மூலம் சம்பாதித்த பணத்தை கட்டிவிடுக' என்று உத்திரவிடப்பட்டதாம்!

அவராவது அதிகாரி—அச்சத்துக்கும் ஆசைக்கும் இடையே அகப்பட்டுக்கொண்டு செய்திருக்கிறார். ஆனால் அந்த அதிகாரிக்கும் மேலானவர், இந்தியாவின் சின்னமாக வெளிநாட்டில் வீற்றிருப்பவர், பிரதம மந்திரி அளவுக்கு ஒவ்வொரு நாட்டிலும் மதிப்பையும் கவுரவத்தையும் பெறுகிறவர், ஒரு வெளிநாட்டுத்தூதுவரே என்ன செய்தாராம் தெரியுமா? 1961-ஆண்டு வரைக்கும் தேவையென்று சொல்லி, ஒரு மாளிகையைப் பிடித்தார், வியாபார விளம்பரத்துக்கு என்று. ஆண்டுக்கு 1150-பவுன் வாடகை என்று பேசி, அட்வான்சாக 4000-பவுனையும் கொடுத்தார்.

இப்படி ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டுமானால், ஆலோசனை கேட்பதற்கென்று வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு நிதி ஆலோசகர் ஒருவர் உண்டு. அவரைக்கூடக் கலக்கவில்லை, தூதுவர்! ஒருவேளை வேண்டாம் என்று சொல்லிவிட்டால் என்ன செய்வதென்கிற அச்சம்போலும். அதனால் அவருக்குக்கூடச் சொல்லவில்லை!!

அப்படி பிடிக்கப்பட்ட கட்டிடத்துக்கு 'ரிபேர்' வேறு செய்ய வேண்டி நேர்ந்ததாம். அதற்காக வேறு 6000 பவுன்களை—ஏ! அப்பா!! — வீசியெறிந்தாராம் தூதுவர்.

சர்க்காருக்கு கணக்குக் காட்டி பணம் கேட்டபோது, 'ரிப்பேர்' செலவுக்கென்றே சொல்லவில்லையாம்.

இவ்வளவும் செலவழித்த, மாளிகை பிரயோசனப்படுததப் பட்டதா என்றால், அப்படியே இருக்கிறதாம்!!

இது எந்தநாட்டுத் தூதுவராலயத்தில் என்றுகேட்பீர்கள்—சாட்சாத் கிருஷ்ணமேனனின் தங்குமிடமாகவும் இப்போது நேருவின் சகோதரி விஜயலெட்சுமி தேவியார் வெளிநாட்டுத் தூதுவராக வீற்றிருப்பதுமான பிரிட்டனில் தான்!!!

* * *

வியப்பும், நிசமா இது என்கிற எண்ணமும் தோன்றும். ஐயங்கொள்வோர் மார்ச்சு 30-ந் தேதிய இந்து இதழ் 8-ம் பக்கம் நாலாப் 'பத்தி'யினைப் பாருங்கள்.

பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் மட்டுந்தான் போலும் இந்தக் கூத்து என்றெண்ணாதீர்கள், இது போல ஏராளமான ஊழல்கள் உண்டு என்கிறது கணக்குக் குழு.

**'இப்படி நீண்ட காலத்துக்கு மாளிகைகளை எடுப்பதும், அவைகளை உபயோகப்படுத்தாமல் விட்டுவிடுவதுமான சம்பவங்கள் ஏராளம் உண்டு. இவைகளைக் கண்டு; குழு, மிக்க வேதனையும் கவலையும் அடைந்தது.'**

வேதனையடைந்தோம், என்கின்றனர், கணக்குக் குழுவினர். எத்தனையோ முறை இப்படிப்பட்ட தவறுகளை இந்தக் குழுவினர் எடுத்தோதி வருகின்றனர், ஒரு முறையாவது வெளிநாடுகளுக்குச் செல்லும் நேரு பண்டிதர் வேண்டாம், அவருக்காவது நேரமிருக்காது, சுற்றிக்கொண்டே உள்ளாரே ஒரு மந்திரி யென்கிற பெயரில் அந்த கிருஷ்ணமேனன் கண்டறிந்து வந்ததுண்டா? நேருவிடம் சொல்லி கண்டிக்கும்படியாவது செய்ததுண்டா? அவருக்கு ஜசனைச் சந்திப்பதிலும் ஈடனைப் பேட்டிக் காண்பதிலுமுள்ள அக்கரை ஏழைகளின் வரிப்பணத்தைக் காப்பதில் இல்லை. இருந்தால், கணக்குக் குழு, இப்படிக் கூறுமா?

**"வெளிநாட்டுச் செலவு, தொடர்ந்து அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. நாட்டின் பொருளாதார நிலைமையை அனுசரித்தும், வரி கட்டும் மக்களுக்கு திருப்தி ஏற்படுத்தும் வகையிலும், இது போன்ற செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்"**

இந்த அறிவுரையை நேரு சர்க்காருக்கு, கணக்குக் குழு வழங்குகிறது. பலதடவைகள் சொல்லிவிட்டோம். வெளிநாட்டுச் செலவு ஏறிக்கொண்டேபோகிறதுஎன்று, வேதனையுடன் சொல்லுகிறது.

வெளிநாடுகளில் இருப்போர் தான் என்றல்ல, நேருவுக்குப் பக்கத்திலே, நேத்திரக்கிருபைக்குப் பாத்திரமாகி அமர்ந்திருக்கிறார்களே அமைச்சர்கள் — இது போன்ற தவறுகள் ஏற்படாமல் தடுக்கவும் நாட்டில் இன்பம் கொழிக்கவுமான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய அமைச்சர்கள்— அவர்களே என்னசெய்கிறார்களாம் தெரியுமா? தங்கள் இலாகாவுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கேட்கிற போது அதிகமாகவே கேட்கிறார்களாம்! அப்படிக்கேட்டுவாங்கி, அதனை எப்படிச் செலவுசெய்வதென்று தெரியாது வைத்துக் கொண்டு விழிக்கிறார்களாம்!— 'கம்யூனிடி' திட்டத்துக்கென 14-கோடி கொடுக்கப்பட்டதில் 7-கோடியை செலவழிக்க வகை தெரியவில்லையாம். காரணம், இந்த மந்திரிகளுக்கு

**கணக்குப்போட்டு
செலவழிக்கத்
தெரியவில்லை!!**

என்கிறது, குழு. இப்படிப்பட்ட அழகான ஆட்சிக்குழுவை, வைத்திருக்கும் நேரு அவர்கள் தான் அனுதினமும் 'ஞானோபதேசங்களை' அள்ளி அள்ளி வழங்குகிறார் மக்களுக்கு.

ஒவ்வொருவரும் மக்களுக்குப் பாடுபட வேண்டும், என்கிறார்!

அப்போதுதான் காங்கிரஸ் செல்வாக்கு பெறமுடியும் என்று தெரிவிக்கிறார்!

ஆங்காங்குள்ளோரின் திறமைக் குறைவே காங்கிரஸ் வீழ்ச்சிக்கு காரணம் என்கிறார்!

அவர்களுக்கெல்லாம் நல்லுரையும், ஞானோபதேசமும், அருள் மொழியும், தெளிவுரையும், ஆனந்தமாக அளிக்கிறார். நேருவின் பார்வைக்கு இதெல்லாம் போகாமலா இருக்கமுடியும்? தவறுக்கு காரணகர்த்தாக்களாக இருப்போர், தனக்குவேண்டியவர்களும் உறவினர்களும்தானே!! இருந்துமா, கண்டிக்காமல் விடுகிறார் — என்றெல்லாம், மனங் குழம்புகிறது, இரண்டையும் ஒரு சேர படிக்கும் நமக்கு. ஊருக்கு உபதேசம், உனக்கல்லடி என்றுமே ஒருவன் அதைப்போல இதெல்லாம் ஊருக்குத்தானு, என்கிற ஐயமும் எழுகிறது — இதை எடுத்துச் சொன்னாலோ, சிந்திப்பதற்குப் பதில் சீறவன்றோ வருகின்றனர், காங்கிரஸ் தலைவர்கள்! "என்றுதான் திருந்துவதோ —மனிதர்—இந்நாடு என்றுதான் திருந்துவதோ", என்று பெருமூச்சாவது விடுவோம்!! ★



# மத்திய கிழக்கு நாடுகள்

இஸ்லாமிய நாகரீகத்தின் பிறப்பிடம்; சரிந்த பல சாம்ராஜ்யங்களின் போர்க்களம்; தகிக்கும் வெயில்; கொதிக்கும் மணல்; அதனடியில் மறைந்து கிடக்கும் வற்ருத எண்ணெய்ச் செல்வம்; இத்தகைய சிறப்புகள் புலபெற்ற மத்திய கிழக்கு நாடுகள், தங்கள் சரித்திரத்திலேயே மிகவும் நெருக்கடியானதொரு கட்டத்தைக் கடந்துகொண்டிருக்கின்றன.

உலக வல்லரசுகள் தங்களுடைய செல்வாக்கை, இந்த நாடுகளில் பரப்பவும் பலப்படுத்தவும் பலத்த போட்டி போடுகின்றன.

இந்த நிலை இன்று மட்டுமல்ல; அலெக்ஸாண்டர், ஜூலியஸ் ஸீசர், தாமர்லேன், நெப்போலியனிலிருந்து கடைசியாக ஹிட்லர் வரையிலும் ஒவ்வொருவரும் மத்திய கிழக்கு நாடுகளைத் தங்களுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வர மிகவும் முயற்சிசெய்து இருக்கின்ருர்கள்.

இதற்கு முக்கியமான காரணங்கள் இரண்டு. ஒன்று ஐரோப்பிய நாடுகளுடன், ஆசிய--ஆப்பிரிக்க நாடுகளை இணைக்கும் பாலமாக மத்திய கிழக்கு நாடுகள் இருக்கின்றன. மேற்கத்திய நாடுகள், ஆசிய நாடுகளுடனும், ஆஸ்டிரேலியாவுடனும் செய்தித் தொடர்பு வைத்துக்கொள்வதற்கு மிகவும் இன்றியமையாத பகுதிகள் இந்த நாடுகளில் இருக்கின்றன.

இரண்டாவதாக, போர்க்காலத்திலும், சமாதான காலத்திலும், எப்போதும், எங்கும் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகின்ற எண்ணெ இந்த நாடுகளில் ஏராளமாகக் கிடைக்கின்றது.

உலகத்தில் இப்பொழுது உற்பத்தி செய்யப்படும் எண்ணெயின் கூடுதல் அளவில் 22 சதமானம் மத்திய கிழக்கு நாடுகளில் கிடைக்கின்றது. சோவியத் ரஷ்யாவைத் தவிர்த்து உலக நாடுகள் முழுவதிலும் இதுவரை கைவைக்கப்படாமல், பாதாளத்தில் பதுங்கிக் கிடக்கும் எண்ணெ எவ்வளவு இருக்கக்கூடும்? என்றுமதிப்பிட்ட நிபுணர்கள், அவர்களுடைய மதிப்பின் அளவில் முக்கால் பகுதி, மத்திய கிழக்கு நாடுகளின் மண்ணில் மறைந்து கிடக்கின்றது என்று கூறுகின்ருர்கள்.

"மத்திய கிழக்கு நாடுகள்" என்று பொதுவான முறையில் செய்தித்தாள்கள் குறிப்பிடுவதை அடிக்கடி நாம் படிக்கின்ரேம். எந்தெந்த நாடுகள், "மத்திய கிழக்கு நாடுகள்" என்ற பொதுத் தொடரில் குறிக்கப்படுகின்றன என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

மொராக்கோ, எத்தியோப்பியா, துருக்கியிலிருந்து இந்தியாவரையிலும் உள்ள பல நாடுகளும் மத்திய கிழக்கு நாடுகள் என்று சிலர் கருதுகின்ருர்கள். ராணுவ நிபுணர்கள், கிரீஸ் நாட்டைக்கூட மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்ருக மதிப்பிடுகின்ருர்கள்.

அராபிய லீக்கைச் சேர்ந்த, எகிப்து, லெபனன், சிரியா, ஈராக், ஜோர்டன், சவூதி அரேபியா, யேமன் ஆகிய நாடுகளும், பெர்ஸிய வளைகுடா, தெற்கு அராபிய தீபகற்பம்ஆகியவைகளைச்சேர்ந்த சிறு சிறு நாடுகளும், இஸ்ரேல், துருக்கி, ஆப்கானிஸ்தானமும் மத்திய கிழக்கு நாடுகளாகப் பெரும்பாலானவர்களால் கருதப்படுகின்றன.

இந்த நாடுகளின் மொத்த மண் பரப்பில் பாதி பாலைவனம்; மற்ற பாதியில் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதல் அளவாக சராசரியில் எட்டு அங்குல மழைதான் பெய்கின்றது. நீர்ப்பாசனவசதிக்கேற்ப நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் இப்பொழுதுதான் திட்டப்படுகின்றன. எனவே விவசாயத்திற்குப் பயன்படும் நிலப்பரப்பு மிகவும் குறைந்த அளவாகவே இருக்கின்றது.

எகிப்தில் அதன் மொத்த மண் பரப்பில் 5-சதமானமும், ஈரானில் 10-சதமானமும், ஜோர்டனில் 7-சதமானமும், சிரியாவிலும் இராக்கிலும் 30-சதமானமும், சவூதி அரேபியாவில் 6-சதமானமும்தான் விவசாயம் செய்யப்படுகின்றது.

மத்திய கிழக்கு நாடுகள் கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பாலைவனங்களுக்கு வெவ்வேறு பெயர்கள் வழங்குகின்றன. நைல் நதிக்கு மேற்கே உள்ள பகுதி சஹாரா பாலைவனம் என்றும், கிழக்குப் பகுதி அராபியப் பாலைவனம் என்றும் அழைக்கப்படுகின்றது. அராபியப் பாலைவனத்திற்குள் சமீப காலத்தில்பத்திரிகைகளில் அதிகமாக அடிபட்ட சிருய்ப் பாலைவனம் என்ற பகுதியும் அடங்கியிருக்கின்றது. டமாஸ்கஸ், அம்மான், பாக்தாத் இவைகளுக்கிடையேயுள்ள பகுதி, சிரியன் பாலைவனம் என்றும், ஈரானியப் பாலைவனம் "தாஸ்த்-ஈ-கவிர்" என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் மரமோ, செடிகொடிகளோ இல்லாமல் ஒரே பொட்டை வெளியாகவும், பூமி ஒரே மணற்காடாகவும் பெரும்பாலான பாலைவனப் பகுதிகள் காணப்படுகின்றன. அபூர்வமாகப் பெய்யும் மழைக்குப்பிறகு, சில இடங்களில் புல் பூண்டுகள் முளைக்கின்றன. இத்தகைய இடங்களில் வாழ்கின்ற மக்கள் மழை பெய்தவுடன் பார்லி விதைத்துப் பயிர் செய்கின்ருர்கள்.

வெவ்வேறு கண்டங்களைச் சேர்ந்த பல்வேறு நாடுகளிலும் தன்னுடைய மேலாதிக்கத்தைப் பர்ப்ப விரும்பும் ஒவ்வொரு வல்லரசும், மத்திய கிழக்கு நாடுகளைத் தன் "கையில் போட்டுக்கொள்

வதைத்'' தான் முதற்படியாகக் கருதின! கருதுகின்றன. இதே போன்று உலக ஆதிக்கத்திற்கு முயலும் ஒரு வல்லரசை மட்டம் தட்ட விரும்பும் மற்ருெரு வல்லரசு, மத்திய கிழக்கு நாடுகளில் அதனுடைய செல்வாக்கு பரவுவதைத் தடுப்பதற்கும், மேற்படி நாடுகளை எல்லா வகைகளிலும் பாதுகாப்பதற்கும் முயற்சி செய்திருப்பதை உலக வரலாற்றுச் சுவடிகளின் ஏடுகள் நமக்கு நன்கு எடுத்துரைக்கின்றன.

இரண்டாவது உலகப் போரின் போது நடந்த ஒரு நிகழ்ச்சி, இந்த நிலையை உலகமே கண்டு வியக்கும் வகையில் நன்கு விளக்கியது.

நேச நாடுகள் டன்கர்க்கில் ''வெற்றிகரமாகப்'' பின் வாங்கி விட்டன; பிரான்சு சடசட வென்று சரிந்துவிட்டது; இன்ருே நாளையோ இங்கிலாந்து தாக்கப்படும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்ருர்கள். இங்கிலாந்தில் இந்த நெருக்கடியான கட்டத்தில் எல்லா வகையான சாதனங்களும் கூடிய, எந்த நேரத்திலும் போர் முனைக்குச் செல்லக்கூடிய ஒரு டிவிஷன் போர் வீரர்கள் தான் இருக்கின்ருர்கள். எதிர்பார்க்கப்படுகின்ற ஜெர்மானியப் படையெடுப்பைத் தடுப்பதற்காக, இந்தப் படை இங்கிலாந்திலேயே இருக்கும் என்றுதான் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள்.

ஆனல், இங்கிலாந்தின் முன்னுள் முதன் மந்திரியும், உலக ராணுவ நிபுணர்களில் ஒருவருமாகிய சர் வின்ஸ்டன் சர்ச்சில், இந்தப் படையை மத்திய கிழக்கு நாடுகளில் ஒளுருகிய எகிப்துக்கு அனுப்பினுர். மத்திய கிழக்கு நாடுகளில் ஜெர்மானிய ஆதிக்கம் நிலை பெற்றுவிட்டால், போரில் வெற்றி காண்பது மிகவும் கடுமையாகி விடும் என்பதை நன்கு உணர்ந்தே சர்ச்சில் இவ்வாறு செய்தார்.

ஜெர்மன் தளபதி ரோமல் லிபியா வழியாகப் பாய்ந்துவந்து சூயஸ் கால்வாயைக் கைப்பற்றுவதற்காகச் செய்த பகீரதப் பிரயத்தனத்தைத் தடுத்து நிறுத்திய பெருமை இந்தப் போர்வீரர்களைச் சேரும்.

இரண்டாவது உலகப்போர் ஆரம்பமாவதற்கு முன்னர், அதாவது 1939-ம் ஆண்டில், மத்திய கிழக்கு நாடுகள் முழுவதிலும் 10 கோடி பேரல்கள் எண்ணை இறைக்கப்பட்டது. இந்த உற்பத்தி அளவு பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு அதாவது 1952-ல், 76 கோடியே 20 லட்சம் பேரல்களாக அதிகரித்துவிட்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மக்கள் சிறப்பாக ஈரான், ஈராக், சவூதி அரேபியா. பெர்ஸிய வளைகுடாவில் உள்ள பஹ்ரேன் (Bahrain), குவைட் (Kuwait); கட்டார் (Qatar) முதலிய நாடுகளில் உள்ள மக்கள், தாங்கள் நடமாடும் பூமிக்கு அடியில் புதையுண்டு கிடக்கும் செல்வத்தின் சிறப்பை சில காலமாக உணர ஆரம்பித்துள்ளார்கள். அத்துடன் அந்த செல்வத்தைத் தேடி, பணபலம் படைத்த வெள்ளையர் கூட்டம் தங்கள் நாடுகளில் கூடாரம் அடித்துவிட்டதையும் காண்கினறுர்கள்.

அமெரிக்காவில் உள்ள எண்ணெய் கிணறுகளிலிருந்து ஒரு நாளைக்கு சராசரியில் 12 பேரல்கள் எண்ணெய்தான் இறைக்கப்படுகின்றது. ஆனல் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள கிணறுகளிலிருந்து சராசரியில் ஒரு நாளைக்கு 5000 பேரல்கள் இறைக்கின்ருர்கள். இவ்வாறு மிக விரைவில் எண்ணெய் எடுக்கப்படுவதுடன் அல்லாமல், இதற்குத் தேவையான தொழிலாளர்களும் மிகக் குறைந்த சம்பளத்திற்குக் கிடைக்கின்ருர்கள். எனவே, அமெரிக்காவிலோ அல்லது உலகிலுள்ள வேறு பல நாடுகளிலோ, உற்பத்தி ஆகும் எண்ணெயின் அடக்கவிலையிலிருந்து மிகக்குறைவான விலைக்கு மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகின்னது. நிலைமை இவ்வாறு இருந்தும், இந்த எண்ணெய் குறைந்த விலைக்கு விற்க அனுமதிக்கப்படுவதில்லை.

சில எண்ணெய்க் கம்பெனிகளுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும லாபத் தொகையைப் பார்க்கும்பொழுது, நாம ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. 1954-ல ஸ்டாண்டர்டு எண்ணெய் கம்பெனியின் மொத்த லாபத் தொகை 280-கோடியே 80-லட்சம் ரூபாய்கள்; இதே ஆண்டில் ராயல் டச் ஷெல் கம்பெனியின் லாபம் 180-கோடியே 96-லட்சம் ரூபாய்கள்.

அரசாங்கங்களை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை படைத்த இத்தகைய எண்ணெய் கம்பெனிகளின் செல்வாக்கு, மத்தியகிழக்கு நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்றது. சில பல நாடுகளில், அரசாங்கத்தின் கொள்கைகளை உருவாக்குவதில், இந்தப் பரங்கியர் கூட்டம் மறைமுகமாக முயற்சி செய்து வெற்றியும் கண்டுள்ளது. சில நாடுகளில், பொது மக்களிடையே செல்வாக்குபெற்ற அரசியல் தலைவர்கள் பலர், எண்ணெய் கம்பெனிகளிலிருந்து மாதந்தோறும், மறைமுகமாக ஊதியம் பெறுகின்ருர்கள். இந்தப் பணம், மேற்படி தலைவர்களால் குறிப்பிடப்படுகின்ற பெயரில், ஐரோப்பிய நாடுகளில் உள்ள பேங்குகளில் கட்டப்படுகின்றது.

இரவும் பகலும் மணிக் கணக்கில் தொடர்ச்சியாக சொன்மாரி பொழியும் கெய்ரோ வானெலி நிலையம், வெள்ளையர்களுக்கு எதிராக விஷத்தைக் கக்குகின்றது. மத்திய கிழக்கு நாடுகளின் மக்களிடையே தேசபக்திக் கனல் கொழுந்துவிட்டெரியச் செய்கின்றது. மேல்நாட்டு அரசாங்கங்களின் செல்வாக்கு, எண்ணெய் கம்பெனிகளின் மேலாதிக்கம் ஆகியவைகளை உதறி எறிவதற்கான முயற்சிகளை மத்திய கிழக்கு நாட்டு மக்கள் ஆரம்பித்து விட்டார்கள்.

—கைத்தறி.

★

ஜனநாயகமென்பது தனிப்பட்டதோர் அரசியல் அமைப்பல்ல; அரசாங்கத்தை நிர்வாகம் செய்வதல்ல; பொதுமக்களுடைய வாக்குரிமை மூலமாகவும், தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமாகவும் சட்டங்கள் இயற்றுவதும் அரசாங்கத்தை நடத்துவதுமல்ல. மனிதர்களுடைய பரஸ்பர சம்பந்தத்தையும் அவர்களிடத்தேயுள்ள மனிதத் தன்மையையும் வளர்ப்பதே ஜனநாயகம். தனிப்பட்டவர்களுடையவும் ஒரு சமுதாயத்தினுடையவும் வாழ்க்கையின் நமூனு அது.

—ஜான் டீவே

## காஞ்சீபுரம்

**14—4—57**

## தம்பி !

தேர்தல் துவங்கிய நாள்தொட்டு, பத்திரிகைகளில் பல்வேறு விதமான படங்களைக் கண்டாய் அல்லவா? ஒவ்வொன்றும், நமது கழகத்தை மக்கள் துச்சமென்றெண்ணி ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும், நச்சுப் பூச்சு என்றெண்ணி நசுக்கி அழித்திடவேண்டும் என்ற நோக்கத்துடன் வெளியிடப்பட்டன. படங்களை வெளியிட்டவர்களின் எண்ணம் கெட்டது என்பது மட்டுமல்ல, நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது, அவர்களுக்கே உள்ளபடி, நமது கழகத்திடம் அத்துணை வெறுப்பு! வெறுப்புக்குக் காரணம் என்ன என்று எண்ணுகிறாய்? நம்மைப்பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளாதது. அல்லது தவறாகப் புரிந்துகொள்வது, அல்லது புரிந்துகொள்ளவேண்டுமென்ற எண்ணமே கொள்ளாமல், ஏனோதானோ என்ற போக்குடன் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் இருந்து வந்தது.

ஏழைக் குடும்பத்து ஏந்திழை, தன் கணவனுக்கு வந்துற்ற நோய் தீர்க்க மருந்துபெற, செலவுக்குப் பணம் கிடைக்காமல், தன் காதணியைக்கொண்டு சென்று, அங்காடியில் விற்றிட முயலும் காட்சியைக் கண்டதுண்டா? சோகம் கப்பிய முகம்—நீர் தளும்பும் கண்கள்—தைலமற்ற கூந்தல்—அழுக்கேறிய ஆடை—தட்டுத் தடுமாறும் பேச்சு—தள்ளாடும் நடை! இந்நிலையில் இருந்திடும் அம்மை, காதணியை விற்றிட முனையும்போது, அங்காடி ஐயன், ஐயோ! பாவம்! என்று இரக்கம்காட்டுவதில்லை—பொருள் களவாடப்பட்டதோ? என்றே ஐயப்படுகிறான். அச்சமூட்டும் கேள்விகளால் தாக்குகிறான். கண் கசிந்து காரிகை நின்றாலோ, "நீலிவேடமிட்டு, என்னை ஏய்க்காதே! கள்ளி! காதணியை எங்கு களவாடினாய்?" என்று கேட்டு கண்டபடி ஏசுகிறான், போலீசுக்குத் தகவல் கொடுத்திடும் போக்கினனும் உண்டு. காரணம் என்ன? அந்த அம்மையின் கோலம்!! கண்ணகியின் காற்சிலம்பு விற்ற கோவலனையே, கோலம் கண்ட மன்னன், கெடுமதியாளன் சொல்லை நம்பி, கள்ளனென்று கூசாது கூறி, கொலையும் செய்திட கட்டளை பிறப்பித்தனனே!!

அஃதேபோல, நமது கழகத்தின் கொள்கைகளை எடுத்துக்கூறி, ஆதரவு திரட்ட முனைந்திடும், நாம், எளியோர். நாற்பதாண்டு அனுபவம்—நாலாறு இலட்ச பணபலம்—ஏழெட்டு கிராமச் சொத்து—எனும் 'மகிமை'கள் இல்லை; சாமான்யர்கள்; பெரிதும் இளைஞர்கள்! அணிபணியினை ஓர் ஏழை விற்றிட முற்படும்போது, ஐயம் கொண்டு, அதட்டி மிரட்டிக் கொடுமை செய்யும் உலக வழக்குக்கு ஒப்ப, நல்ல மதிப்புள்ள கொள்கைகளை, நாம் எடுத்துக்காட்டுகிறோம், அதுகண்டு அலட்சியப்படுத்துகிறார்கள்—அச்சமூட்டுகிறார்கள்—கண்டிக்கிறார்கள்.

# ★ படமும் பாடமும் (3)

மாளிகைவாசிகள் அல்லது மடாலயவாசிகள் மதியற்றது பேசிடினும், உட்பொருள் ஏதேனும் இருந்திடக்கூடும், அதனை அறிந்திடும் 'பரிபக்குவம்' நமக்கு ஏற்படவில்லை என்றெண்ணி, பயபக்தி காட்டுவோர் நிரம்பிய சமூகமல்லவா! அதே பழக்கமல்லவா!! அதனால், நாம் எடுத்துக்காட்டும், கொள்கைகளில் சிறப்பும் சீலமும், நமது போக்கில் பொறுப்பும் இருப்பதாக, நம்புவது பெரும்பாலோருக்குக் கடினமாக இருக்கிறது. இதன் காரணமாகவே, நம்மைப் புரிந்துகொள்ள மறுத்து வந்திருக்கிறார்கள்; புரிந்து கொள்ளாததால் அலட்சியமாகப் பேசி ஏச முற்பட்டனர்.

அந்தப் போக்கின் விளைவுதான் நம்மைக் குறித்து, இதழ்கள் வெளியிட்ட பலப்பல கேலிப் படங்கள்!! அவைகளை எல்லாம் கண்ட உனககு, இந்த இதழில் ஒருபடம் காணும் வாய்ப்பு! இதழின் மேலட்டையில்! பார்த்திருப்பாய்! மேலால் படிப்பதற்கு முன்பு, மீண்டுமோர் முறை பார், படத்தை!

அடிபட்ட மாடுகளை மருத்துவ விடுதிக்குத் தூக்கிச்செல்கிறார்கள!! தோல்வி ஏற்பட்ட இடங்களில், காங்கிரசை திருத்த, மருந்தூட்ட புதிய வலிவு ஊட்ட முற்பட்டிருக்கிறார்களே, தலைவர்கள், அதனை விளக்கிடும் படம்.

பல்வேறு இடங்களிலே, காங்கிரஸ் தோற்றிருக்கிறது. காங்கிரசுக்கு இருப்பதுபோன்ற,

**உலகப் புகழ்பெற்ற தலைவர்**
**பிரம்மாண்டமான பத்திரிகை பலம்**
**பெரியதோர் பணபலம்**
**அளவற்ற அதிகார பலம்**

வேறு எந்தக் கட்சிக்கும் கிடையாது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். எனினும், பல மாநிலங்களிலே, காங்கிரஸ் கட்சியினர் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். மாடுகள் அடிபட்டு கட்டித் தூக்கி வரப்படும் காட்சி, இதனைக் காட்டத்தான்! ஆனால் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டதேயொழிய, மருந்தூட்டி மீண்டும் வலிவுபெறச் செய்யமுடியும், அதற்கான வசதி, இருக்கிறது என்பதைக் காட்டவே, 'மாடுகளுக்கு மருத்துவ விடுதி' இருப்பதாகப் படம் காட்டுகிறது!!

தம்பி! இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வந்துற்ற நிலையை எடுத்துக்காட்டும் இந்தப் படம் நமது இதழில் காண்கிறாயே தவிர, இதனை முதலில் வெளியிட்டது நாமல்ல.

**அசாம் ட்ரைப்யூன்** எனும் ஆங்கில நாளிதழில் நான் கண்டபடம்; அசாம் மாநிலத்தில் கௌஹாத்தி நகரிலிருந்து வெளியிடப்படும் இதழ்; காங்கிரசை ஆதரிக்கும் இதழ்தான். காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலில் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதை, காங்கிரஸ் ஏட்டினாலேயே, அடியோடு மறைத்திட இயலவில்லை. மருத்துவ விடுதிக்கு அடிபட்ட மாடுகள் தூக்கிச் செல்லப்படுவது போல் படம் வெளியிடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

கேரளத்தில், கம்யூனிஸ்டு கட்சி அமைச்சர் அவை அமைக்கும் அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறது; பார்க்கலாமே இவர்கள் என்னதான் சாதித்துவிடுகிறார்கள் என்று வீம்பு பேசுகிறார்களே தவிர, காங்கிரஸ் மேலிடத்துக்கு உள்ளத்தைப் பிடித்துக் குலுக்குவது போன்ற நிலைமைதான் இதனால் ஏற்பட்டிருக்கிறது. தேர்தலுக்குமுன்பு, இம்முறை கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி தலைதூக்காது, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டோம்என்று **வீரம்** பேசினர்-இப்போது, கம்யூனிஸ்டு கட்சி வெற்றிபெற்றுவிட்டால் என்ன! என்ன சாதித்துவிடமுடியும்! கட்டு திட்டத்துக்கு அடங்கி, பெட்டிப்பாம்பு ஆகி, நாங்கள் சொல்லுகிறபடி ஆடித்தீரவேண்டும். இல்லையானால் அமைச்சர்களுக்குச் சீட்டுக்கொடுத்துவிடுவோம் என்று **வீம்பு** பேசுகின்றனர். ஏமாற்றமும் கிலியும் இவ்விதம் பேசச் செய்கிறது என்பதை எவரும் எளிதில் அறிய முடிகிறது!!

நேரு பண்டிதரை, ஆசியாவைக் கம்யூனிஸ்டு அபாயத்திலிருந்து காப்பாற்றவல்ல 'புருஷோத்தமர்' என்று கொண்டாடி வரவேற்கும் அமெரிக்கா, 'நேருவின் இந்தியாவில்,' ஒரு மாநிலம்—அது அளவிலே எப்படி இருப்பினும் சரி—கம்யூனிஸ்டு அமைச்சர்களின் ஆட்சியில் வந்துவிட்டது என்ற செய்தி கேட்டு, பாராட்டவா செய்யும்!! 'நேருவின் இந்தியா'—நேருவின் பிடியிலிருந்து பிய்த்துக் கொள்கிறது என்ற பேருண்மையைக் கேரளம் எடுத்துக் காட்டுகிறது!!

அகில இந்தியாவையும், உலகின் பல்வேறு நாடுகளையும், சிந்தனையில் ஆழ்த்திவிட்ட அளவு வெற்றி பெற்று, அமைச்சர் அவை அமைக்கும் நிலையைப் பெற்றிருக்கும் கம்யூனிஸ்டு கட்சியின் வெற்றியையே, கேலிக்குரியதாகப் பேசும் போக்கில், காங்கிரஸ் தலைவர்கள் இருக்கும்போது, தம்பி! 15 இடங்களை மட்டுமே பெற முடிந்த-நம்மை ஒரு பொருட்டாகவா மதிப்பார்கள்!! மமதை நிரம்பியவர்களாகப் பேசுகிறார்கள்!!

அந்தப் போக்கு தவறு, தீது பயப்பது என்பதைக்காட்டவே, அடிப்பட்ட மாடுகளை மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்வதாகப் படம் போட்டுக் காட்டி, **அசாம் டிரைப்யூன்** அறிவூட்டுகிறது.

காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு, கேரளத்தில் சிதைக்கப்பட்டிருப்பது, பண பலத்தால் அல்ல, கொள்கை பலத்தால். காங்கிரஸ் கட்சி பிற்போக்குக் கொள்கையின இருப்பிடமாகவும், முதலாளித்துவத்தின் பாசறையாகவும்,சர்வாதிகாரம் நெளியும் இடமாகவும் இருக்கிறது, எனபதை உணர்ந்த மக்கள், முற்போக்கும் ஜனநாயகமும், சமதர்மமும் வேண்டும் என்ற தம்முடைய 'வேட்கை'யை கம்யூனிஸ்டு கட்சியின் வெற்றி மூலம் எடுத்துக் காட்டுகின்றனர். இது காண, முற்போக்கு எண்ணங் கொண்ட எவருக்கும் மகிழ்ச்சியும் பெருமையுமாகவே இருக்கும்.

ஆனால், காங்கிரசின் செல்வாக்கை ஒரிசாவில் சிதைத்தவர்கள், காங்கிரஸ்காரர் எவ்வளவோ தீவிரவாதிகள் என்று சொல்லத்தக்க அளவுக்குப் பிற்போக்குவாதிகளாக உள்ள கண தந்த்ர பரீக்ஷத் எனும் ஜரிகைக்குல்லாய்க்காரர்கள்!!

மராட்டியப் பகுதியிலேயோ, பல்வேறு கட்சிகளிலும் உள்ள மொழி அரசு கொள்கை கொண்டவர்கள் ஒன்றுகூடிய 'சமிதி' காங்கிரசைஅந்தப்பகுதியில் முறியடித்திருக்கிறது.

அசாமில், தனிநாடு கேட்போர் செல்வாக்குப்பெற்று விளங்கும் மலைநாடு, காங்கிரசை வீழ்த்தியிருக்கிறது.

இங்கு, காங்கிரசை எதிர்த்து நின்ற நாம், பொச்சரிப்புக்காரர்

தவிர, பிறர் கண்டு பாராட்டத் தக்க வகையில் வெற்றி பெற்றிருக்கிறோம்.

இந்தக் 'குறிகள்' காலப்போக்கைக் காட்டுவதாகும் என்று கருத்துத் தெளிவுள்ளோர் எண்ணுகின்றனர் - அநாதியாகத் தெரியும் என்பதற்காகவே எதிலும் காட்டுப்போக்கு காட்டுபவர்கள் மட்டும், பூ! பூ! இதெல்லாம் ஒரு வெற்றியா!! இதுகளெல்லாம் ஒரு கட்சியா!! என்று பேசுகின்றனர்.

தம்பி! தேர்தலின்போது, நமது கழகத்தை இழித்தும் பழித்தும் பெரியாரின் படை பேசியபோது, மனம் குமுறிய பலர் என்னிடம் கூறினர் — என்னிடம் கூறுவானேன் ஐயா! என் செவிக்கேதான் அந்தச் சங்கீதம் நித்த நித்தம் கேட்கிறதே என்று சொன்னேன்; இப்படி வரைமுறையின்றி வாய்க்கு வந்தபடி பேசுகிறார்களே, இதை அனுமதித்துக்கொண்டே போவதா என்று கேட்டனர்; நாம் அனுமதிப்பதாவது தடுப்பதாவது, இந்த இழிமொழிகளைத் தாங்கிக்கொள்வதற்கான நெஞ்சு உரத்தை நாம் பெறவேண்டும் என்று பதிலளித்து அனுப்பினேன். பிறகு நானே யோசித்தேன்—ஏன் அவ்விதமாகப் பேசுகிறார்கள் என்று. எனக்கு, தம்பி! பேசுபவர்களின் நிலை புரிந்தது—புரிந்ததால் எனக்கு அவர்களிடம் இருந்த 'கொஞ்சநஞ்சம்' கோபம் கூடக் குறைந்தது, அனுதாபம் ஏற்பட்டது. அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள வேலையும், தமக்கென்று மேற்கொண்டுவிட்ட போக்கும், வேறு விதத்தில், முறையில், பேசவைக்கவில்லை — முடியவில்லை.

**புலிவேடம் போட்டுக்கொண்டு பரத நாட்டியம் ஆடமுடியுமா?** கற்பனை செய்து பாரேன்!!

புலிவேடம் போட்டு ஆடுவது என்றால், அதற்கான விதத்தில் தாவியும் பாய்ந்தும், பதுங்கியும் உலுக்கியும்,'ஜகா' வாங்கியுந்தான் ஆடவேண்டும் — ஆட முடியுமே தவிர, பரதநாட்டிய பாணியிலா ஆடிக்காட்ட முடியும்!!

அதுபோலத்தான், தம்முடைய கொள்கைகளுக்கு ஆதரவு திரட்டுவது என்ற வேலையை விட்டுவிட்டு, அல்லது மூட்டை கட்டி ஒரு புறம் வைத்துவிட்டு, யார் பேரிலோ எதற்காகவோ ஏற்பட்டுவிட்ட ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக்கொள்வதற்காக, வேறு யாருக்கோ 'அடி ஆளாக'ப் போகத் துணிந்துவிட்டபிறகு, அதற்குத் தகுந்த 'பாஷை' தானே இருக்கும்—வேண்டும் — பிறக்கும் —மணக்கும்!

எத்தனை எத்தனை ஏற்புடைய கொள்கைகளை, எவ்வளவு எழிலுடன் எடுத்துக் கூறிவந்தவர், இன்று இப்படிப்பட்ட 'பாஷை' யில் பேசவேண்டி நேரிட்டுவிட்டது என்று எண்ணியபோது, உண்மையிலேயே நான் அனுதாபப்பட்டேன்.

அந்த நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள், இப்போதும் அதே முறையில் பேசுகிறார்கள் — தமக்கென வேறு புரட்சிகளைக் கண்டுபிடித்து செயல்படுகிறவரையில், இதே 'பாஷை' தான் இருக்கும்.

பொதுவாகவே, அரசியல் நிலைமைகளுக்கான ஆய்வுரைகளையும், தீர்ப்புகளையும், அவ்விடமிருந்து எதிர்பார்த்தால், எரிச்சலும் ஏமாற்றமும்தான் கிடைக்கும். அல்லிப் பூவில் மல்லிகை மணம் கிடைக்காது!

ஆனால், அரசியற் குறிகளைக் கண்டு காலத்தைக் கணிப்போர், காங்கிரசுக்குப் பல்வேறு பகுதிகளிலே ஏற்பட்டிருக்கும் 'சரிவு சிதைவுகளை' சுட்டிக்காட்டுகிறார்கள்.

இதழின் மேலட்டையில் உள்ள படம், இந்த நோக்கத்தை விளக்குவதாக இருக்கிறது.

தம்பி! தேர்தலென்பதே ஒரு பித்தலாட்டம் — அதில் ஈடுபடுபவர்கள் அனைவருமே அயோக்கியர்கள்—ஓட்டர்கள் எல்லோருமே அப்பாவிகள் — என்ற 'அருமை' யான தத்துவத்தையும் கண்டறிந்து கூறிக்கொண்டு, அந்தத் தேர்தலில், ஓட்டு கேட்பதற்காக யார் பின்னோடு சென்றால், மனதுக்கு இலாபகரமான சந்தோஷம் கிடைக்கும் என்று இருந்தவர்களின், பேச்சும் போக்கும், தொல்லை நிரம்பிய வாழ்க்கையில் தவிக்கும் மக்களுக்கு, ஒரு பொழுதுபோக்காகிவிட்டது. எனவே, அது குறித்து நாம் அதிகமாகக் கவனிப்பதற்கில்லை!!

நாம் பெற்ற வெற்றிகள், கம்யூனிஸ்டு கட்சி கேரளத்தில் பெற்றுள்ள மகத்தான வெற்றி, கணதந்திரபரீஷத் ஒரிசாவில் பெற்ற கவலையூட்டும் வெற்றி, மராட்டிய மண்டலத்திலே சமிதி பெற்றுள்ள வசீகரமிக்க வெற்றி, அசாமில் மலைநாடு பெற்றுள்ள குறிப்பிடத்தக்க வெற்றி—இவைகளுக்கான காரணங்களைச் சிலர் உள்ளபடி கண்டறிந்தாகவேண்டுமென்று முயலுகின்றனர்.

அந்தச் சிரமம் நமக்கேன் என்று கருதும் போக்கினர்—காட்டுத் தீ —கடுவிஷம் — என்று சுடுசொல் கூறிவிடுவதன் மூலம் தமது வேலை முடிந்துவிட்டதாகக் கருதுகின்றனர்.

பீகார் மாநிலத்திலிருந்து வெளிவரும், **இந்தியன் நேஷன்** எனும் ஆங்கில இதழ், இது குறித்து வழங்கியுள்ள ஆய்வுரை சுவையும் பயனும் உள்ளதாக இருந்திடக் கண்டேன். கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி பெற்ற வெற்றி பற்றியே அந்த இதழ் ஆய்வுரை அளித்திருக்கிறது — என்றாலும், பொதுவான அரசியல் விளக்கமும், தத்துவவிளக்கமும் அதிலே இருந்திடக் காண்கிறேன்,

**ஆரிய—திராவிடப் பிரச்சினை என்பது அபத்தம் என்பாரும்,**

**ஆரிய — திராவிடப் பிரச்சினை ஆபத்தானது என்பாரும்,**

**ஆரிய—திராவிடப் பிரச்சினை என்பது' புதை குழியைத் தோண்டிப் பார்த்திடும் போக்கு என்பாரும், உண்டல்லவா?**

காங்கிரசு கட்சி மட்டுமல்ல' வெற்றிபெற்ற கம்யூனிஸ்டு கட்சியே கூட, **ஆரிய—திராவிடப் பிரச்சினையை**, கேவலமானது, கேடு பயப்பது என்று சில வேளைகளிலும், இல்லாதது இட்டுக்கட்டியது என்று சில நேரங்களிலும், பேசிடக் கேட்கிறோம்.

நமது கம்யூனிஸ்டு நண்பர்கள்' திடுக்கிட்டுப் போவர் என்று எண்ணுகிறேன், '**இந்தியன் நேஷன்**, இதழ் தரும் ஆய்வுரையைக் கண்டால்.

தம்பி! இதழ் 'பாட்னா'விலிருந்து வெளியிடப்படுகிறது, காஞ்சிபுரத்துக் காகிதமல்ல!!

**கம்யூனிஸ்டு கட்சி கேரளத்தில் வெற்றி பெற்றதற்குக் காரணம் கேரளத்தில் உள்ள திராவிட உணர்ச்சிதான் என்று அந்த இதழ் எழுதுகிறது.**

Kerala is a small re-organised state in the South

கேரளம், தெற்கே உள்ள புதிதாக உருவாக்கப்பட்ட அரசு.

The basis of her culture is Dravidian

அதன் அடிப்படை திராவிடப் பண்பாடு.

இந்த எழுத்துக்களைப் படிக்கும் போதே, மற்றவர்களுக்கு ஏற்படுவதைவிடக் கம்யூனிஸ்டுகளுக்கு எரிச்சல் இருக்கும் — திராவிடமாவது ஆரியமாவது-என்று முணுமுணுப்பர். ஆனால் 'இந்தியன் நேஷன்', பண்பாடுகளுக்குத் தக்கபடிதான் அரசியல் மாற்றங்கள், இதுபோது ஏற்பட்டுள்ளன என்பதை எடுத்து விளக்குகிறது.

In our analysis there are historical reasons for the growing Communist influence in the Non—braminical belt of India

பார்ப்பனரல்லாதார் வாழும் இந்தியப் பகுதிகளிலே கம்யூனிஸ்டு செல்வாக்கு வளர்ச்சி அடைந்து வருவதற்கு சரித்திர பூர்வமான காரணங்கள் இருப்பதை, ஆராய்ந்தறிகிறோம்.

To be precise, the Communist party is showing better results in the Non-Aryan belt

குறிப்பாகக் கூறுவதானால், கம்யூனிஸ்ட்டு கட்சிக்கு, ஆரியமல்லாத பகுதிகளிலேதான் நல்ல பலன்கள் கிடைத்துவருகின்றன!

There is marked influence of ommunist in Southern states and in Bengal, which may be taken as Non-Aryan Belt

தென்னரசுகளிலும், வங்காளத்திலும், கம்யூனிஸ்டுக்கு சிறப்பான செல்வாக்கு இருக்கிறது — இந்த இடங்களை ஆரியரல்லாதாரின் வட்டாரங்கள் என்று குறிப்பிடலாம்.

செச்சேச்சே! இதென்ன இந்தக் கழகத்தார், பாட்டனிலுள்ளவர்களைக்கூடவா, கெடுத்துவிட்டார்கள், பார்ப்பனர்—அல்லாதார்! ஆரியர் — திராவிடர்! ஆரிய பூமி, திராவிடத்தரணி! என்ற பைத்தியக்காரத்தனமான பேச்சு, பாட்டுவில்கூடவா எழுவது! — என்று கை பிசைந்துகொண்டும், கண்களைக் கசக்கிக்கொண்டும், சிலர் கூவக்கூடும். 'இந்தியன் நேஷன்' —கேரளம் திராவிடப் பண்பாடு, மிகுந்த இடம் அங்கு கம்யூனிஸ்டு கட்சி வெற்றி பெற்றதற்குக் காரணம் அதுதான், என்று கூறிவிட்டு அதற்கானவிளக்கம் தராமலில்லை. ஆரிய கலாச்சாரம், திராவிடப் பண்பாடு, என்பவையின் அடிப்படை பற்றிய விளக்கம் அளிக்கிறது.

The Aryan mind which may be Characterised as the Brahminical mind may be sharp but it is rigid. It is burdened with rites and taboos It may be metaphysical but it is not emotional and as such it is not very receptive

ஆரிய மனப்பான்மையை பிராமண மனப்பான்மை என்று கூறலாம். அந்த மனப்போக்கு, கூர்மை நிரம்பியதாக இருக்கலாம்; ஆனால், அது வளர்ச்சிபெற மறுக்கும், ஆழ்ந்துவிட்ட நிலையில் உள்ளது. தடை விதிகளையும் சடங்குகளையும் சுமந்துகொண்டிருப்பது. வேதாந்தப் போக்கினதாக இருக்கலாம், ஆனால், எழுச்சிக்கு இடமளிப்பதில்லை; எனவே புதிய கருத்துகளை வரவேற்று ஏற்றுக்கொள்ளும் வளம் ஆரிய மனப்பான்மைக்கு இல்லை.

The Non-Aryan mind is definitely emotional

ஆரியரல்லாதார் மனப்பான்மை நிச்சயமாக எழுச்சி மிக்கது.

It is receptive to New ideas

புதிய கருத்துகளை வரவேற்று ஏற்றுக்கொள்ளும் மன வளம் கொண்டது.

Thus the anti-Congress temper in the south and in Bengal has found expression in the support to the Communist party

எனவே, தெற்கிலும் வங்கத்திலும் கிளம்பிய காங்கிரஸ்எதிர்ப்புணர்ச்சி, கம்யூனிஸ்டு கட்சியை ஆதரிப்பது என்ற வடிவமெடுத்தது.

But in the Aryan Belt the opposition pattern is different

ஆனால் ஆரிய வட்டாரத்தில், காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சியின் வடிவம் வேறு வகையானதாக இருக்கிறது.

The Janata party and the Jharkand party represent the anti-Congress mood in Bihar, but they are not wedded to revolutionary experiments

பீகாரில் உள்ள, ஜனதா கட்சி, ஜார்கண்டு கட்சி, காங்கிரஸ்எதிர்ப்புணர்ச்சியின் வடிவங்களாக உள்ளன; ஆனால் இவை புரட்சிகரமான திட்டங்களைக் கொள்ள மறுப்பவை.

The Ganatantra Parishad is strong in Orissa as an opposition party; the Jana Sangh and independents have shown some strength in the Punjab, Rajsthan, Uttar Pradesh which are strongly Aryan Belts

ஒரிசாவில், பலம் வாய்ந்த எதிர்க் கட்சியாக கணதந்த்ர பரிஷத் உள்ளது; ஜனசங்கமும் சுயேச்சைகளும பஞ்சாப், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் சிறிது வலிவு பெற்றுள்ளனர்— இந்த இடங்களெல்லாம் ஆரிய வட்டாரங்கள்.

The Dravidian mind is a daring mind, with experimental attitudes. It struggles for new expressions and rich varieties

திராவிட மனப்பான்மை, அஞ்சாதது; புத்தம் புது முறைகளைக் கையாண்டிடத் துடிப்பது.

தம்பி! ஆரிய திராவிடப் பிரச்சினையைப் பேசிடும் நாம், வீணர்கள் என்று விளம்பி வந்தனரே, இப்போது அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? ஆரியர்—திராவிடர் என்று நாம் தனி ஆட்களை குறித்து, வெறுக்கவோ, விரட்டி அடிக்கவோ, பேசும் போக்கினல்ல, முறைகளைத்தான் எடுத்துக்கூறி வருகிறோம்.

அதுவும் தவறு—முறைகள் ஒன்ருெடொன்று குழைந்து போயே விட்டன, என்று கூறுவார் உளர்.

அவர்களெல்லாம் அகலக் கண்களைத் திறந்து பார்ப்பர், பாட்ளு இதழ் தரும், இந்த ஆய்வுரையைக் கண்டு.

ஆரியம் என்பது பழமையின் பாசறை—திராவிடம் புதுமை பூத்திடும் பூங்கா—என்று நாம் கூறும் போது, அடுக்கு மொழி பேசுகின்றனர் மயக்க, என்று அலட்சியம் செய்தனரே, அவர்கள், இந்திய பூபாகத்தில் இருவேறு பகுதிகளை ஆரியக் கலாச்சாரம் பீடித்துக்கொண்டுள்ள இடம், திராவிடப் பண்பாடு நிரம்பிய இடம் என்று வேறு படுத்திக் காட்டி, அந்த வேறுபாட்டினுக்கேற்றபடி, அரசியல் நிலைமைகள் உருவாகின்றன என்பதைபாட்ளுபத்திரிகை விளக்கும் போது, என்ன பதில் அளிக்கின்றனர்!!

பாட்ளுவில் உள்ள இந்த இதழுக்கும், நமது கழகத்துக்கும் தொடர்பு துளியும் இல்லை.

இல்லாததால்தான், கேரளத்தில் கம்யூனிஸ்டு பெற்ற வெற்றிக்குக் காரணம், அந்த நாட்டிலே உள்ள திராவிடப் பண்பாடு, என்று எழுத முற்பட்ட இதழ் **திராவிட முன்னேற்றக் கழகம்** என்ற பெயருடனேயே பணியாற்றி, குறிப்பிடத்தக்க வெற்றிபெற்ற நம்மைக் குறித்து, ஏதும் எழுதவில்லை.

HOME LAND—ஆங்கில இதழ் வெளிவந்த பிறகு, கருத்துத் தொடர்பு ஏற்படக் கூடும்; அப்போது நமது கழகத்தின் செல்வாக்கு எத்திறத்தது என்பதனை இன்று அறியாமலிருக்கும் பலரும் அறிந்திட வாய்ப்புக் கிடைக்கும்.

வம்பு வல்லடிக்காரர்கள், வறட்டுக் கூச்சலிடுவோர், வகுப்புவாதம் பேசுவோர், வரைமுறை அழித்திட ஆர்ப்பரிப்போர் என்றெல்லாம், ஏளனமும் எரிச்சலும் கலந்த குரலிற் பேசிவந்தோரெல்லாம், இப்போதுதான் சிறிதளவு விழிப்புற்று நம்மைப்பற்றி அறிந்திட ஆவல் காட்டுகின்றனர். தம்பி! நமக்குக் கிடைத்தது 15-இடங்களேதான் என்ருலும், இதுவரையில் இல்லாத அளவிலும் முறையிலும், நமக்கு மக்களின் இதயத்திலே இடம் கிடைத்திருக்கிறது.

இடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மட்டுமே, மதிப்பு அளிக்கப்பட வேண்டும் என்று ஜனநாயகக் கோட்பாடு கூறிடவில்லை.

அதிக எண்ணிக்கை உள்ள இடங்களைக் கைப்பற்றிவிட்டால், உடனே காங்கிரஸ் வட்டாரம், கன்னத்தில் போட்டுக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறதா என்ருல், அதுவுமில்லை.

நாம்தான், பல இடங்களில் டிபாசிட் இழந்தோம், பலமாகத் தோற்ருேம், பதினைந்தே இடங்களில் மட்டுமே வெற்றிபெற்ருேம், எனவே பரிகாசம் செய்கின்றனர், என்று வாதத்துக்கு ஒப்புக்கொள்வோம். நிரம்ப இடங்களைப் பிடித்துவிட்டால் மட்டும் மதிப்பளிக்கின்றனரோ? அந்த மாண்பு இருக்குமாளுல் மராட்டிய மக்கள் பெற்றுக் காட்டிய மகத்தான வெற்றி கண்ட காங்கிரசார், மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, இழைத்த அநீதியைத் துடைத்திட அல்லவோ முற்படுவர்! செய்தனரோ? அதுதான் இல்லை! மொழிவெறி ஊட்டி, மக்களை பெருமளவு ஏய்த்துவிட்டனர், என்று குற்றம் சாட்டி, மராட்டிய மக்கள் பெற்ற வெற்றியின் மதிப்பைக் குறைத்துப் பேசுகின்றனர்.

மராட்டிய மண்டலத்தில் மட்டும் 135-இடங்களில் நடைபெற்ற சட்டசபைத்தேர்தலில்,காங்கிரஸ், 32-இடங்களைத்தான் பிடித்திட முடிந்தது; 100-இடங்கள் சம்யுக்த மராட்டிய சமிதிக்குக் கிடைத்தது. மலையைக் கல்லினர் எலி பிடித்தனர் காங்கிரசார் என்று கூறிப்பார், ஆர்பரிப்பர், அந்தத் தலைவர்கள்! செய்யாத முயற்சி இல்லை—வீசாத பணம் இல்லை—பேசாத தலைவர் இல்லை-எனினும் பலன் கிட்டவில்லை.

டில்லி பாராளு மன்றத் தேர்தலில், 23-இடங்கள்; இதில் 2-இடங்கள்தான் காங்கிரசுக்கு!

மராட்டிய மக்கள் தாயகத்திடம் செலுத்தவேண்டிய அன்பினைத் தெளிவுபடக் காட்டிவிட்டனர்.

தடியடியும் துப்பாக்கிப்பிரயோகமும் நடாத்திய காங்கிரஸ்தாருக்குத் தக்க பாடம் புகட்டிவிட்டனர்.

உற்ருர் உறவினர் என்றும், உலகம் மெச்ச வாழ்ந்திடுவோர் என்றும், உயர்ந்த இடத்தில் அமர்ந்தோர் என்றும் என்ன கித்தாப்பு பேசினுலும், அவர்கள் உரிமையை அழித்திடுவோர் என்ருல், அவர் அடிவருடமாட்டோம் உரிமைக்காக வீரப் போரிட்டே தீருவோம், என்று மராட்டிய மக்கள், செயலால் காட்டிவிட்டனர்! 135-க்கு 32!!—காங்கிரசுக்கு!

இந்தத் தெளிவான முடிவுக்குப் பிறகாவது, காங்கிரஸ் கட்சி தோல்வியை ஒப்புக்கொண்டு, தன் எதேச்சாதிகாரத்தை விட்டொழித்ததா? இல்லை! இல்லை! 135-ல் 100-இடங்களில் வெற்றி பெற்ற 'சமிதி'யைக் கேவலப்படுத்தித்தான் பேசி வருகிறது.

'நாக நாடு' உரிமைக்காகக் கிளர்ச்சிகள் நடத்திப் பலன் காளுததால் பிசோ எனும் தலைவனுடைய ஆணையின் கீழ் திரண்டெழுந்து போர்க்கொடி உயர்த்திவிட்டிருக்கும் நாகர்கள் — சிதறுண்டு போயினர், சரணடைந்தனர், இந்திய ராணுவமும் ராஜதந்திரமும் சேர்ந்து நடத்திய தாக்குதலால், எதிர்ப்பு அழிந்தொழிந்து, தனிநாடு கேட்பது தீது என்ற தெளிவுபெற்று நாகர்கள், இப்போது இந்திய சர்க்காருடன் ஒத்துழைக்கத் துடிக்கின்றனர், தோழமையைப்பெற விழைகின்றனர், என்றெல்லாம் 'டில்லி' பிரசாரம் செய்ததல்லவா? பிசோ பிடிபட்டு அடிபணிய வேண்டியது ஒன்றுதான் பாக்கி, அவன் வலது கரம்—அவன்கண்—அவனுடைய காது—அவனுடைய மூளை—

---

பொதுமக்களின் ஆதரவு பெற்றிருக்கிற வரையில்தான் ஜனநாயகத்திற்கு உயிருண்டு. அந்த ஆதரவு அதற்கு எப்படி கிடைக்கும்? சாதாரண மக்கள் பாதுகாப்பு பெறக் கூடிய மாதிரியும் அவர்களுக்கும் அவர்களுடைய சந்ததியாருக்கும் வாழ்க்கையில் நம்பிக்கை உண்டு பண்ணக் கூடிய விதத்திலும் சமுதாயம் அமைக்கப்படுமாளுல் அப்பொழுதுபொதுமக்கள்ஜனநாயகத்திற்கு முழுமனதோடு ஆதரவு கொடுப்பார்கள்.

—ரூஸ்வெல்ட்

போன்ற 'சகாக்கள்' பிடிபட்டனர், அறிவூட்டப் பெற்றனர், அடங்கி விட்டனர் என்றெல்லாம் அறிக்கைகளை வெளியிட்டு டில்லி தர்பார் மகிழ்ச்சி தெரிவித்ததல்லவா, அந்த நாகநாடு இந்தத் தேர்தலிலே என்ன பாடம் தந்திருக்கிறது, தெரியுமோ!

கடந்த பொதுத் தேர்தலின் போது, "எம்மை அடிமைப்படுத்திய டில்லி, நடத்தும் தேர்தலில் நாங்கள் கலந்துகொள்ளப்போவதில்லை. உரிமையை உயிரினும் மேலெனக் கருதிடும் நாகர் எவரும், இந்தத் தேர்தலில் பங்கு கொள்ளக்கூடாது" என்று நாகநாடு காணக் கிளர்ச்சி நடத்துபவர் கூறினர். நாகநாடு, அடியோடு தேர்தலை வெறுத்துத் தள்ளிவிட்டது. 'நாகநாடு' பகுதிக்கென இந்திய சர்க்கார் 3-பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்டு என்றனர்; ஒரு இடத்துக்கும் 'ஆள்' கிடைக்கவில்லை, தேர்தலுக்கு நிற்க!!

இந்தத் தேர்தலின்போதும் ஒரு தொகுதிக்கு யாருமே அபேட்சகராக நிற்க முன்வரவில்லை!

மற்ற இரண்டு தொகுதிகளிலும், நாகநாடு தனி அரசு ஆக வேண்டும் என்ற உரிமைத் திட்டத்தை ஆதரிக்கும் சுயேச்சைகள்தான் வெற்றிபெற முடிந்தது —காங்கிரஸ் அல்ல!

நாகநாடு பகுதியில், 19-சட்டசபைத் தொகுதிகளில், காங்கிரஸ் கட்சி, பெற்ற வெற்றி என்ன என்று கேட்டுப்பார்! நேரு பண்டிதரை உலகமே புகழ்கிறது என்கிறார்கள் — ஆனால் தனி அரசு கோரும் நாகர்கள், அந்தப் புகழொளி கண்டு மயங்கிட மறுத்துவிட்டனர். 19-ல் 1-இடமே காங்கிரசுக்கு! ஒன்றே ஒன்று!!

குன்றுக்குக் குன்று, விடுதலை வேட்கை தாவுகிறதாம் அங்கு!

இங்கு அணைத்துவிட்டோம், அங்கு அணைத்துவிட்டோம் என்று கூறி முடிப்பதற்குள், நாகநாடு உரிமைக்காக எழுந்துள்ள தியாகத்தீ, வேறு இடத்திலே கொழுந்துவிட்டு எரியக் காண்கின்றனர். வீழ்ந்துபட்டனர் என்றெண்ணி, வீழ்த்த எடுத்துக்கொண்ட உழைப்பினால் ஏற்பட்ட வியர்வையை இந்திய ராணுவத்தினர், துடைத்துக்கொண்டிருக்கும்போதே, வேறோர் இடத்திலே எதிர்ப்பு வெடிக்கிறது.

இந்த நிலைமையைக் கண்டாவது காங்கிரஸ் தலைவர்கள், நாகநாட்டினர் வீறுகொண்டு எழுந்துள்ளனர், எம்மால் அவர்களை அடிமைப்படுத்த முடியவில்லை—வேட்டு முறையிலும் அவர்களை அழிக்க முடியவில்லை, ஓட்டு முறையாலும் ஒடுக்க இயலவில்லை நாகநாடு தனி அரசு ஆகவேண்டும் என்பவர்களே, பெருவாரியான இடங்களிலே வெற்றி பெற்றனர்—19-ல் 1-தான் காங்கிரசுக்குக் கிடைத்தது — என்று கூறி, நாகநாடு கேட்பவரிடம் மதிப்பு காட்டுகின்றனரா? இல்லை! இல்லை! இந்த நாகர்கள், தலைவெட்டிக் காலந்தள்ளுபவர்கள், வெளிநாட்டாரின் கைப்பாவைகள், காட்டுப் போக்கினர் என்று இழிமொழி பேசுகின்றனர்.

தேர்தலில், மக்களின் தீர்ப்பு எங்ஙனம் அமைகிறது என்பதைக் கண்டறிந்து, காங்கிரஸ் கட்சி தன் போக்கை மாற்றிக்கொள்வதாக இல்லை.

காரணம் வேறு ஏதேனும் காணவும், பெற்ற வெற்றிக்குக் களங்கம் கற்பிக்கவும் முற்படுகின்றனரேயொழிய மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளிக்க முன்வருவதில்லை.

எதிர்க்கட்சிக்கு வெற்றி எத்தனை இடங்களில் என்பதைப் பொறுத்து காங்கிரஸ், தன் நோக்கையும் போக்கையும் அமைத்துக் கொள்ள மறுக்கிறது.

எனவே தம்பி, நமக்குக் கிடைத்த இடங்கள் எத்தனை என்பதுகூட அவ்வளவு முக்கியமல்ல,

**எவ்வளவு எதிர்ப்புக்குப் பிறகு!**

என்பதுதான் மிகமிக முக்கியமானது. இந்த வெற்றி, அளவிலே எப்படியோ இருக்கட்டும், தரம் எப்படிப்பட்டது என்றால்,

**அனைவருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கிறது.**

**தமிழகத்தில் புதியதோர் வலிவு பொலிவுடன் எழுகிறது என்ற எண்ணத்தை உண்டாக்கி வைத்திருக்கிறது.**

**மக்கள் மனதிலே புதியதோர் ஆவல், அன்பு, நம்பிக்கை உணர்ச்சி எழுந்திருக்கிறது.**

**இவ்வளவு ஏற்றமும், நமது கழகம், தன்னந்தனியே நின்று போராடிப் பெற்றது; துணை—கூட்டு—ஒத்துழைப்பு — என்பதேதும் இல்லை, என்று அறியும் போது, மக்கள் நமது கழகத்துக்கு உள்ள வலிவினை உணர முடிகிறது.**

சிலாக்கியமான கொள்கைகள் உள்ளன; எவரும் போற்றிப்புகழ்ந்திடத்தக்க கொள்கைகள; நாட்டுக்கு மிகமிகத் தேவையான கொள்கைகள் என்பதிலே ஐயமில்லை, ஆனால், அந்தக் கொள்கைகளைப் பரப்புவதாகக் கூறிக்கொண்டு உலவும் இந்தப் 'பேர் வழிகள்' சரியான ஆட்களல்லவே, தரமற்றவர்கள், திறனற்றவர்கள், நேர்மையற்றவர்கள்; எனவே கொள்கை வெற்றி பெறாது; கொள்கை சிலாக்கியமானது என்பதற்காக, இப்படிப்பட்ட தரம் கெட்டவர்களுடன் கூடிப் பணியாற்ற முடியுமா! — என்று சில கட்சிகளைக் குறித்து எடுத்துக் கூறிடுவதுண்டு.

'ஆசாமிகள்' நல்லவர்கள். நாணயமானவர்கள், திறமைமிக்கவர்கள், மதிக்கத்தக்கவர்கள், அறிவாற்றலுள்ளவர்கள்-அதிலே ஒருவருக்கும் ஐயமில்லை; ஆனால் அவர்கள் எடுத்துக்காட்டும் கொள்கைகள் சரியானவைகளல்லவே, கேடு பயப்பன, நாட்டுக்குக் கேவலத்தைத் தருவன, மக்களை நாசப்படுத்துவனவாக உள்ளனவே; என்ன செய்வது, ஆசாமிகள் நல்லவர்கள் என்பதற்காக, அவர்களுடன் கூடி நாட்டைக் கெடுக்கும் கொள்கைக்கு ஆக்கம் அளிக்கலாமா — அறிவுடைமையாகுமா, ஆபத்தல்லவா அது? என்று சில கட்சிகள் குறித்துச் சிலர் கூறுவதுண்டு.

தம்பி! நம்மைப் பற்றிப் பலரும் கூறிவந்ததோ,

**கொள்கையும் கேடானவை நாமும் தரமற்றவர்கள்**

என்பதல்லவா?

கொள்கை ஏது இவர்களுக்கு, வகுப்புவாதம் —நாசமூட்டுவ

தாகுமே, நாட்டைப் பிளக்கும் நாசகாலர்களுக்குக் கட்சி ஒரு கேடா, வறட்டுக் கூச்சலிட்டுக்கொண்டு நாட்டைக் குட்டிச்சுவராக்கும் ஒரு கும்பலுக்கு, கொடி ஒன்று வேண்டுமோ!!—நம்மைக் குறித்து, மாற்றுக் கட்சிகள் கூறுவனவற்றை, மெத்தக் கஷ்டப்பட்டு, நாகரீகமாக்கித்தர முயன்றிருக்கிறேன்.

இதுவரையில் எந்த ஒரு கட்சியையும் இவ்வளவு கேவலமாக, ஒருவர் பேசி ஏசியதில்லை.

அவர்கள் நம்மைப்பற்றிக் கூறியுள்ள 'இழிமொழிகளை'த் தாங்கிக் கொள்ள முடிந்ததொன்றே, பலருக்கு பெரிய ஆச்சரியமாக இருக்கிறது.


இவ்வளவு கேவலப்படுத்தப்பட்ட நமது கழகம், மக்களிடம் இந்த அளவுக்கு மதிப்பு பெற முடிந்தது என்றால், நாம் உள்ளபடி பெருமைப்படாமலிருக்க முடியுமா?

எத்துணை கேவலப்படுத்திக் காட்டினோம், இவர்களை வளரவிடாதீர்கள் நாட்டுக்கு நாசம் என்று எச்சரித்தோம, எனினும் பதினாறு இலட்சத்துக்கு மேல் வாக்குகளை இந்த மக்கள் கொட்டித் தந்தனரே!-என்று எண்ணும் போதே, நம்மை ஏசிவருபவர்களின், வயிறு 'பகீர்' என்கிறது, நெஞ்சு பதறுகிறது, மக்களையே, துரத்தித் துரத்தி அடிக்கலாமா என்று துடிக்கிறார்கள்.

பதினைந்து இடங்களைப் பிடித்து விட்டார்களாம் — பதினைந்து!!—பூ! இது ஒரு பிரமாதமா என்று பரிகாசம் பேசுகிறார்களே, அதன் உண்மையான பொருள் இதுதான்; மக்களின் இதயத்திலே நமக்கோர் மதிப்புள்ள இடம் கிடைத்துவிட்டது என்ற உண்மை அவர்களின் உள்ளத்தைச் சல்லடைக் கண்ணாகத் துளைக்கிறது; துடியாய்த் துடிக்கிறார்கள்.

அவர்கள் வீட்டில் சிறுவர்கள், கள்ளங்கபடமற்ற நிலையில், "அப்பா! பத்தும் ஐந்தும் கூட்டினால், எவ்வளவு?" என்று கேட்டு விட்டால்கூடப் போதும், அவர்கள் பாபம், பதறி, "பாவீ! பாதகா! கண்ணீர்த்துளிகளின் 'வெற்றி'யையா கொண்டாடுகிறாய்! என் எதிரிலா? அவ்வளவு ஆணவமா உனக்கு? எதைக்கண்டு மயங்கி விட்டாயடா, ஏமாளி! அந்தப் பயல்களின் பேச்சைக் கேட்டா, எழுத்தைப் பார்த்தா? பாடல் கேட்டா, படம் பார்த்தா? பத்தும் ஐந்தும் கூட்டுவதா, பத்தும் ஐந்தும் பதினேழு! போ! ஆமாம்! அப்படித்தான் சொல்லுவேன்! கூரைமீது ஏறிக் கூவுவேன்! கோபுரத்தின் மீது ஏறிக் கொக்கரிப்பேன்!" என்றெல்லாம்கூட, குளறுவர்! நல்லவர்கள்தான், பாபம்; ஆனால் அவர்கட்கு வந்துற்ற நோய் அப்படிப்பட்டது!!

அண்ணன்,



## 2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு திங்களுக்குமேல்கூட ஆகலாம். அப்படிப்பட்ட நாட்களிலே வடக்கு நோக்கிப் புறப்பட்டான். சாதாரணமாகக் கிளம்பினாலே உணவும் உடையும் பெரியதொரு பிரச்னை! இவனோ, படைவீரர்கள் பலரோடு வெற்றிகொள்ளக் கிளம்பினான். எத்தனையெத்தனை இடையூறுகளைத் தாங்கியிருக்க வேண்டும் — முட்புதர்களும், வனவிலங்குகளும் சாமான்யமாகவா இருந்திருக்கும்? ஒவ்வொரு நாட்டையும் கடந்து சென்றபோது சிந்திய குருதியும், இழந்த வீரர்களின் எண்ணிக்கையும் எத்தனையெத்தனையோ!— எண்ணிடின் இதயம் நடுங்கும். எனினும் அவ்வீரன், எல்லா இடங்களையும் வென்றான்! வென்றுகொண்டே இமயமலை வரையில் சென்றான்! அந்த மாபெரும் மலையில்லையெனில், நமது வீரன், எங்கெங்கு சென்றிருப்பானோ? இமயம் வரையில் வந்தோம் என்பதை அறிவிக்க புலிக்கொடியினை நாட்டினான். கொடி எத்தனை நாளைக்கு இருக்கும். அதனால் பல இடங்களில் தன்னுடைய புலிக்கொடியின் உருவத்தைக் கல்லிலே பொறிக்கச் செய்தான்.

**இவ்வாறு புலி பொறிக்கச் செய்த இடங்கள் சிக்கிம்பகுதியில் உள்ளனவென்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுவார்கள். அந்தப் பகுதியில் சோழர் மலைத்தொடர் என்றும், சோழர் கணவாய் என்றும் இரண்டு இடங்கள் இருக்கின்றனவாம்.**

அப்படிப்பட்ட மன்னவனின் உள்ளத்தில்தான், காவிரியின் நீர் பாழாகிறதே எனும் கவலை ஏற்பட்டது. அமைச்சர்களைக் கூட்டி ஆலோசித்தான். "ஐயன்மீர்! தாங்கள் அரசர் எனும் பெரும் பதவியில் உள்ளீர். அது வழங்கும் ஆனந்தத்தை அனுபவித்து விட்டு, மக்களின் ஆரவாரத்தையும் கேட்டுவிட்டுப்போகாமல், வீணாக வாங்கின வரியைச் செலவழிக்கும் இதுபோன்ற வேலைகளில் ஈடுபடவேண்டும்?" என்று கருதுகிற அமைச்சர்களல்ல! மக்களின் வாழ்வுக்காகவே அமைச்சர் பதவி ஏற்றிருப்பதாக உளமார நம்பியவர்கள்! அதனால் அரிய பல யோசனைகளை அளித்தார்கள். விளைவாக காவிரிக்குக் கரை கட்டுவதென்றும், பல கால்வாய்கள் வெட்டி விரயமாகும் நீரை நாட்டுக்குள் கொண்டு செல்லுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. 1700-ஆண்டுகளுக்கு முன்பு இந்த முடிவு செய்யப்பட்டது! இதனைத்தான் வடநாட்டுகன்வார், புகழ்ந்து புகழ்ந்து பாராட்டுகிறார்!

கரை கட்டுவதென்றால் லேசா? காவிரி மேற்கே குடகு நாட்டில் பிறந்து எத்தனையோ குறுநில மன்னர்களின் நாடுகளையெல்லாம் தாண்டி, சோழ மண்டலத்துக்கு வருகிறது, இங்கு மட்டும் கரை அமைத்து விட்டால் போதுமா! தண்ணீர் ஆங்காங்கே சேதமானால்; எப்படி இங்கு வரும்—கால்வாய்கள் நிரம்பும்? அதனால், பற்பல குறுநில மன்னர்களுக்கும் தனது ஆசையைத் தெரிவித்து, இந்தக் கரை கட்டும் வேலையில் உதவச் சோழ நாட்டிலிருந்து தொழிலாளிகளையும் அனுப்புவதாகத் தெரிவித்தான். அவர்களும் இணங்கி, அவனுடைய விருப்பத்துக்குக் கட்டுப்பட்டார்கள். இணங்காதவர்களில் ருத்திரன் என்பான் ஒருவனும்! அவனைப்போல் சித்திரம் ஒன்று தீட்டச் சொல்லி அதில் ஒரு கண்ணை வேலால் கிழித்து, "உனக்கும் இந்தக் கதிதான் ஏற்படும்", என்று அவனுக்கு அனுப்பி

## பிறப்பு

சிதம்பரம் தி. மு. க. தோழர் இராசக்கரவர்த்தியின் மனைவி முத்துலட்சுமி 2—3—57ல் செவ்வாய் காலை 9 மணியளவில் ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் ஈன்றார். தாயும் குழந்தைகளும் நலம் என்ற செய்தியை கேட்க மகிழ்கிறோம்.

வைத்தான், அதைக்கண்டு மிரண்ட அம் மன்னனும், தனது பணியைச் செவ்வனே செய்தான்.

செயற்கரிய காரியங்களைச் செய்தவர்கள் என்று, உலக ஏட்டில் உலவும் ஜூலியஸ் சீசர், மாவீரன் அலெக்சாண்டர், மகா அரசன் அசோகன் என்றெல்லாம் நமது சரிதம் சொல்லுகிறது—நமது குழந்தைகளும் படிக்கிறார்கள். ஆனால், இம் மாபெரும் நிலப்பரப்பையே வெற்றி கொண்டவனும், யாரும் எண்ணிப்பார்த்திராத நாட்களிலேயே மாநதி ஒன்றின் நீரைக் கழனிகளுக்குப் பாய்ச்ச திட்டம் செய்தவனுமான வீராதிவீரன், வேங்கைக் கொடியோன், திருமாவளவன் எனும் பெயர் கொண்டோன், கரிகால் பெருவளத்தானைப் பற்றிப் பேச யாரிருக்கிறார்கள்? புகழ யாருள்ளனர்? அவனது புலிக்கொடிக்கும், அக் கொடி தவழ்ந்து விளையாண்ட நாட்டுக்கும், சரிதம்தான் உண்டா?-வியந்து பாராட்டிய டில்லி அதிகாரி கன்வாருக்கே, இங்குள்ள இன்சினீயர் ஆனந்தராவ் என்பார் எடுத்துச்சொன்னபிறகே, தெரிந்திருக்கிறது. "ஆகா! சீனாவில் நான் பார்த்தபோது, வியந்தேன்; அதிசயித்தேன். அதற்கும் முந்தியே கரிகாலன் எனும் மன்னன் காவிரிக்குக் கரை கட்டியுள்ளானே! கால்வாய்கள் பல வெட்டியுள்ளானே! வடநாட்டு மன்னர்களைப் போலன்றி மக்களுக்காக வாழ்ந்திருக்கிறானே!", என்று ஆச்சரியமடைந்து போயுள்ளார். கடந்த ஏப்ரல் முதல்நாள், தஞ்சைக்கு அருகிலுள்ள "கிராண்ட் அணைக்கட்டில்" நடைபெற்ற மின் விளக்கு ஒளி ஏற்று விழாவின்போது, நடைபெற்ற நிகழ்ச்சி இது.

வடவர் மட்டுமல்ல, உலகத்தவரே நம்முன்னோரைப் பற்றி வியப்பதைப் பற்றியும், அவர் ஆண்ட தமிழ்நாட்டின் வளம் குறித்து வானளாவப் புகழ்வது குறித்தும், ஏராளம் அறிவோம் நாம். ஆனால் அத்தகைய நாடு, இன்று எப்படி உள்ளது? பரம்பிக்குளம்தண்ணீர், மலையாளத்திலிருந்து கிடைக்குமா! பாலாற்றுக்கு நீர், மைசூரிலிருந்து வருமா!!-என்று யோசிக்கிறோம். கரிகாலன், சிற்றரசுகளையெல்லாம், காவிரிக்குக் கரை கட்டி சோழ மண்டலத்தைச் செழிப்பாக்கும்படி நயத்தாலும் பயத்தாலும் செய்தான். காமராசர் அரசோ, பக்கத்திலிருக்கும் அரசுகளைச் சரிகட்டி வரவேண்டிய நீரைக் கொணரவும் திறனில்லாமலிருக்கிறது! தேக்க வேண்டிய நீரினைத் தேக்கி, அதனைப் பிரித்தெடுத்து நாடு முழுமைக்கும் அனுப்பும், திறனுமற்று இருக்கிறது!!

இங்கிலாந்தைப்போல், மின்சக்திக்கு சூரியனை நாடவேண்டிய அவசியமில்லை நமக்கு. இருந்தும் கிராமங்கள் அனைத்தும், இருள் காடுகளாகவே உள்ளன. பாம்புக்கும் தேளுக்கும் தினசரி பலியாவோர் பலர்! வேதனை வாழ்வால் வெந்து மடிவோர் தொகை ஏராளம்!! இதோ ஒரு செய்தி குடிநீர் குறித்து.

தஞ்சை எப். 1

தஞ்சை ஜில்லாவில் தென்மேற்குப் பாகத்திலுள்ள வல்லம், சிங்கிப்பட்டி பகுதிகளில் குடிஜல வசதிக் குறைவால் அங்குள்ள மக்களில் சுமார் பாதிப்பேர் நரம்புச்சிலந்தி என்னும் வியாதியால். பீடிக்கப்பட்டு சிசுக்கள் முதல் விருத்தாப்பியர்வரை ஒவ்வொரு வருஷமும் தொடர்ச்சியாக 3-முதல் 6-மாத காலம் வெகுவாக அவதிப்படுகின்றனர் என்றும் அவ்வாறு கஷ்டப்படுகிறவர்களில் பெரும்பாலும் விவசாயிகள் என்றும் இது விஷயத்தை பலமுறை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தும் நாளதுவரை ஒருவித நிவாரணமும் அளிக்கப்படவில்லை என்றும் தஞ்சை மாவட்ட கலெக்டரும் சுகாதார அதிகாரிகளும் வருஷா வருஷமும் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு வருந்துவோர்கள் மீது கிருபை கூர்ந்து வியாதி வராமல் தடுப்பு முறையைக் கையாளுவதோடு வியாதியால் பீடிக்கப்பட்டு இருப்பவர்களுக்கு சிகிச்சையும் உடனடியாகச் செய்ய அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்தால் மிகவும் பேருதவியாக இருக்குமென்று மக்கள் சார்பில் செங்கிப்பட்டி பிர்க்கா, ஆச்சாம்பட்டி கிராமம் ஏ. ஜே. நல்லபெருமாள் நாட்டார் தெரிவிக்கிறார்.

'மித்திரன்' நிருபர் தருகிறார் இத் தகவலை. நீரில்லாக் கோளாறால், வியாதி பரவுகிறது! குறைகளைச் சொல்லியும் எவ்வித நிவாரணமும் அளிக்கப்படவில்லை! ஆண்டுதோறும் நரம்புச்சிலந்தி நோயால், வருந்துவோர் பலர்.

தஞ்சையில், இந்நிலை! கரிகாலனின் காவிரியால், பலனும் பயனும் பெறுகிறதென்று பலரும் கருதும் தஞ்சை இப்படியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தின் தென்பகுதிகளுக்குச் சென்று பார்த்தால், — பட்டுக்கோட்டை — அறந்தாங்கி — திருத்துறைப்பூண்டி தாலுகாக்களைச் சென்று பார்த்தால், வேதனைதான் மிஞ்சும். அந்தளவுக்கு நிலைமை ஆட்டிப் படைக்கிறது. தமிழ் நாட்டின் வளமிக்க மாவட்டம் எனக் கருதப்படும் இதன் கதியே இப்படியென்றால், சேலத்தைப்பற்றியும் கோவையைக் குறித்தும், இராமநாதபுரம் மாவட்டத்தின் நிலைமையையும், மதுரைப் பகுதியையும், செங்கற்பட்டினையும் என்னவென்று சொல்ல முடியும்? ஆண்டுக்கு 11-மாதங்கள் நீரில்லாது அல்லாடும் இடங்கள் இவை!!

அதிலும் கோடைக் காலம் வந்துவிட்டாலோ, கூறவேண்டியதில்லை. பாசி படிந்த நீர்தான் பலருக்கு குடிநீர், ஆடுமாடும்குளிப்பாட்டும்தண்ணீர்தான் சமையலுக்கும் மற்றதுக்கும், —இதுகூட இல்லாத இடங்களில், பஞ்சமோ பஞ்சம் என்ற கூக்குரல்தான்! இதனால் மக்கள் படும் அவதி சொல்லுந்தரமன்று.

இதனை ஓரளவாவது குறைத்திட வேண்டுமானால், நல்ல நீர்ப்பாசன வசதிகள் வேண்டும். அது இல்லாத இடங்களில், மின்சார மூலம் தண்ணீர்க் கிணறுகள் அமைப்பதும், நல்ல கிணறுகளை வெட்டுவதுமான காரியங்கள் செய்யப்பட வேண்டும்! கிணறுகள் அமைப்பதற்கென, சர்க்காரில் ஒரு திட்டம் உள்ளது. ஆனால் அது நடைபெறும் முறை...!!

விஞ்ஞான யுகத்தில், ஒரு காலத்தில் காட்டுமிராண்டிகளின் நாடுகளெனக் கருதப்பட்ட நாடு எல்லாம் இன்று, செழிப்பும் கொழிப்பும் பெற்றுவிட்டன. ஆனால், அவைகள் ஏற்றம் பெறு நாட்களிலேயே எழில் சூழ் இடங்களையும், வீரமும் அறிவும் கொள் கரிகாலன்களையும் பெற்றிருந்த நாம்-காய்கிறோம்! மாய்கிறோம்!!

★

உங்களுக்கென்று என்ன உரிமை வேண்டுகிறீர்களோ, அதைப் பிறருக்கும் அளியுங்கள். மனதை விரிவுபடுத்திக் கொள்ளுங்கள். குறுகிய புத்தியும், கொடூர சிந்தனையும் அதில் இடம்பெற வேண்டாம்; பேரின்பம் காணலாம்.

—இங்கர்சால்.

"திராவிடநாடு" அச்சகத்தில்
காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு ... அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது